# வருவாய்த் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2016 – 2017

| | | |
|---|---|---|
| மானியக் கோரிக்கை எண்.41 | – | வருவாய்த் துறை |
| மானியக் கோரிக்கை எண்.51 | – | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2016

# பொருளடக்கம்


| பொருள் | பக்கங்கள் |
|---|---|
| முன்னுரை | 1–3 |
| வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு | 4–56 |
| நில நிர்வாகம் | 57–82 |
| நிலச் சீர்திருத்தம் | 83–111 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 112–121 |
| நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் | 122–164 |

# வருவாய்த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2016–17

*"அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும் ஏழை, எளிய மக்களின் துயரங்களைக் களைந்து அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த்துறையின் செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது."*

*மாண்புமிகு முதலமைச்சர்*

# 1. முன்னுரை

இம்மாநிலத்தில் வருவாய்த்துறை, நிர்வாகத்துறையின் அமைப்பில் பாரம்பரிய பெருமைமிக்க துறையாகும். இத்துறை நிர்வாக அமைப்பின் முதுகெலும்பாக திகழ்வதோடு சமுதாய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பெரும்பங்கு வகிக்கிறது. தவிர்க்க இயலாத சூழ்நிலைகள் ஏற்படும் சமயத்தில் இத்துறை முன்னின்று மக்களுக்கு பணியாற்றி வருகிறது. மக்களின் உயிர் மற்றும் உடமைகளை காப்பதிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்கிறது. நில ஒப்படை மற்றும் அத்தியாவசியமானவர்களுக்கு மிகை நிலங்களை நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பகிர்ந்தளித்ததின் மூலம் மாநிலத்தில் சமுதாய சமத்துவ கோட்பாட்டை உருவாக்கும் முயற்சியில் வருவாய்த்துறை பெரும்பங்கு வகிக்கிறது. இத்துறை, பேரிடர் மேலாண்மை, சமூக பாதுகாப்புத் திட்டம், நில வருவாய் ஆவணங்களை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், நில ஒப்படை, நில எடுப்பு, நில சீர்திருத்தம் மற்றும் நகர்ப்புற நிலவரி நிர்ணயித்தல் போன்ற பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

பொதுமக்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் வருவாய்த்துறையின் பங்கு மிக முக்கியமானதாகும். சமூகம் அல்லது மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு

ஏதுவாக மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலகங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன.

- வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத்துறை ஆணையரகம்.
- நில நிர்வாக ஆணையரகம்.
- நிலச்சீர்திருத்த ஆணையரகம்.
- நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம்.
- நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம்.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் பல்வேறு அலுவலர்களுடன் இணைந்து மேற்கண்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. மாவட்ட ஆட்சியருக்கு உறுதுணையாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் துணை நிலை ஊழியர்கள் செயல்படுகிறார்கள்.

## 2. வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

வரலாற்று ரீதியாக அரசின் முக்கியத்துறையாக விளங்கும் வருவாய்த்துறை, பொதுமக்களுக்கு பயன்தரக்கூடிய பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யும் துறையாக விளங்குகிறது. வருவாய் நிர்வாக பணிகளுடன் அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் இத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் நலத்திட்டங்கள் மற்றும் நிவாரண உதவிகள் மக்களுக்கு எளிதாக சென்றடைய ஏதுவாக “**அம்மா திட்டம்**” என்ற மகத்தான திட்டம், சமூக பாதுகாப்புத் திட்டங்கள், விலையில்லா வேட்டிகள்/ சேலைகள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடரை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதிலும், நிவாரணம் வழங்குவதிலும் இத்துறை முழுமையான பங்கு வகிக்கிறது.

### 2.1 மாநிலத்தின் வருவாய் எல்லைகள்

பொதுமக்கள் எளிதாக அணுகும் பொருட்டும், மேம்பட்ட சேவையை வழங்கும் பொருட்டும், வருவாய் நிர்வாகத்துறை அவ்வப்போது விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. புதிய வட்டங்கள்

மற்றும் வருவாய் கோட்டங்களை அவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தேவைக்கேற்ப உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, 2012–13–ஆம் ஆண்டில் 9 புதிய வட்டங்களும், 2013–14–ஆம் ஆண்டில் 25 புதிய வட்டங்களும், 2014–15–ஆம் ஆண்டில் 15 புதிய வட்டங்களும், 2015–16–ஆம் ஆண்டில் 16 புதிய வட்டங்களும் என மொத்தம் 65 புதிய வட்டங்களும், 2011 முதல் 2016 வரை 9 புதிய வருவாய் கோட்டங்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி உருவாக்கி, வரலாற்று சாதனை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது, தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களும், 85 வருவாய் கோட்டங்களும், 285 வருவாய் வட்டங்களும், 1,188 குறுவட்டங்களும், 16,682 வருவாய் கிராமங்களும் கீழ்க்கண்டவாறு உள்ளன.

# அட்டவணை 2.1

## தமிழ் நாட்டில் உள்ள வருவாய் கோட்டங்கள்/ வட்டங்கள்/ குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் விவரங்கள்

| வ. எண். | மாவட்டம் | வருவாய் கோட்டங்கள் | வட்டங்கள் | குறுவட்டங்கள் | வருவாய் கிராமங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | 3 | 15 | 175 |
| 2 | சென்னை | 2 | 10 | 40 | 55 |
| 3 | கோயம்புத்தூர் | 3 | 10 | 38 | 295 |
| 4 | கடலூர் | 3 | 9 | 32 | 883 |
| 5 | தருமபுரி | 2 | 7 | 23 | 470 |
| 6 | திண்டுக்கல் | 3 | 9 | 40 | 359 |
| 7 | ஈரோடு | 2 | 9 | 34 | 375 |
| 8 | காஞ்சிபுரம் | 4 | 13 | 68 | 1137 |
| 9 | கன்னியாகுமரி | 2 | 4 | 18 | 188 |
| 10 | கரூர் | 2 | 6 | 20 | 174 |
| 11 | கிருஷ்ணகிரி | 2 | 7 | 29 | 636 |
| 12 | மதுரை | 3 | 10 | 51 | 604 |
| 13 | நாகப்பட்டினம் | 2 | 8 | 31 | 523 |
| 14 | நாமக்கல் | 2 | 7 | 32 | 391 |
| 15 | பெரம்பலூர் | 1 | 4 | 11 | 152 |
| 16 | புதுக்கோட்டை | 3 | 12 | 45 | 757 |
| 17 | இராமநாதபுரம் | 2 | 8 | 38 | 400 |
| 18 | சேலம் | 4 | 13 | 44 | 631 |
| 19 | சிவகங்கை | 2 | 8 | 39 | 521 |
| 20 | தஞ்சாவூர் | 3 | 9 | 50 | 754 |
| 21 | நீலகிரி | 3 | 6 | 15 | 54 |
| 22 | தேனி | 2 | 5 | 17 | 99 |
| 23 | தூத்துக்குடி | 3 | 8 | 41 | 468 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 4 | 11 | 43 | 502 |
| 25 | திருநெல்வேலி | 3 | 15 | 60 | 559 |
| 26 | திருப்பூர் | 3 | 9 | 33 | 350 |
| 27 | திருவள்ளூர் | 4 | 12 | 54 | 706 |
| 28 | திருவண்ணாமலை | 2 | 11 | 52 | 1064 |
| 29 | திருவாரூர் | 2 | 7 | 27 | 500 |
| 30 | வேலூர் | 3 | 13 | 53 | 841 |
| 31 | விழுப்புரம் | 4 | 13 | 56 | 1459 |
| 32 | விருதுநகர் | 3 | 9 | 39 | 600 |
| | மொத்தம் | 85 | 285 | 1188 | 16682 |

## 2.2 வருவாய் நிர்வாக பணியாளரமைப்பு

வருவாய் நிர்வாகத்துறையில், கிராம உதவியாளர் முதல் துணை ஆட்சியர் பணி நிலை வரை **51,000**–க்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.2

### வருவாய் நிர்வாக பணியாளரமைப்பு

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துணை ஆட்சியர் | 491 |
| 2 | வட்டாட்சியர் | 1721 |
| 3 | துணை வட்டாட்சியர் | 2107 |
| 4 | கண்காணிப்பாளர்/சுத்த நகல் கண்காணிப்பாளர்/ உதவி கணக்காளர் | 85 |
| 5 | வருவாய் உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 6986 |
| 6 | வருவாய் இளநிலை உதவியாளர் | 3019 |
| 7 | தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர்/ காசாளர்/ தொலைபேசி/ நிகரி இயக்குபவர் | 1453 |
| 8 | ஓட்டுநர் | 943 |
| 9 | பதிவுரு உதவியாளர்/ பதிவுரு எழுத்தர்/ படிபெருக்கி இயக்குபவர்/ நகல் எடுப்பவர் | 819 |
| 10 | அலுவலக உதவியாளர் | 3458 |
| 11 | காவலர்/ மசால்சி/ தோட்டக்காரர்/ துப்புரவாளர் | 648 |
| 12 | கிராம நிருவாக அலுவலர் | 12614 |
| 13 | கிராம உதவியாளர் | 16775 |
| | **மொத்தம்** | **51119** |

## 2.3 கிராம நிர்வாகம்

வருவாய் நிர்வாகத்தின் அடிப்படை அலகாக கருதப்படுவது கிராமம் ஆகும். மாநிலத்தில் 16,682 வருவாய் கிராமங்கள் உள்ளன. கிராமத்தின் பொறுப்பு அலுவலராக கிராம நிர்வாக அலுவலர்களும், அவர்களுக்கு உதவி செய்திட கிராம உதவியாளர்களும் உள்ளனர். அனைத்து வருவாய் கிராமத்திற்கும், கிராம நிர்வாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்கள் அரசின் கிராம அளவிலான பிரதிநிதிகளாக கருதப்படுவதுடன் அரசின் பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றனர். கிராம நிருவாகம், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதுடன் உடனடியாக நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொண்டு வருகிறது. கிராம நிருவாக அலுவலர்கள், அரசிற்கு சொந்தமான அனைத்து நிலங்களை பாதுகாத்தல், கிராம ஆவணங்கள் மற்றும் கிராம கணக்குகள் பராமரித்தல் ஆகிய பொறுப்புகளை கவனித்து வருகிறார்கள்.

### 2.3.1 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு/ குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல்

கிராம நிர்வாகத்தை நவீனமயமாக்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். நவீன தகவல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி நில ஆவணங்கள் மேம்படுத்துவதன் மூலம் ஒளிவுமறைவற்ற நிர்வாக அமைப்பினை உருவாக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். அதன்படி, 8,751 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அச்சுப்பொறியுடன் கூடிய மடிக்கணினி, ரூ.25.79 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மடிக்கணினியை இயக்க பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் உள்ள அனைத்து குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு கணினிப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

## 2.4 வருவாய்த்துறை அலுவலகக் கட்டடங்கள்

மாவட்ட நிர்வாகத்தில் வருவாய்த்துறையின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் பணிச்சூழலை

மேம்படுத்தும் பொருட்டும் பொதுமக்கள் எளிதாக அணுகி பயன்பெறவும் வருவாய்த்துறைக்கு தேவைப்படும் அலுவலக கட்டடங்கள்/ குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெப்போதும் இல்லாத அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து உருவாக்கி வருகிறார்கள்.

### 2.4.1 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

**2011** முதல் **2016** வரை தஞ்சாவூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடங்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் ஆகியவை ரூ.**121.78** கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.**57.47** கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடங்கள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

### 2.4.2 வருவாய் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2016 வரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் ஆகிய 4 வருவாய் கோட்டங்களுக்கு ரூ.5.55 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை மற்றும் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் ஆகிய 2 வருவாய் கோட்டங்களுக்கு ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

### 2.4.3 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2015 வரை ரூ.134.14 கோடி மதிப்பீட்டில் 63 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசால் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 2015–16–ஆம் ஆண்டில் 32 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.66.02 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 2015–16–ஆம் ஆண்டில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை

வட்டத்திற்கு பழைய வட்டாட்சியர் அலுவலக கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்ட அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

### 2.4.4 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

2011 முதல் 2015 வரை ரூ.4.03 கோடி செலவில் 29 புதிய குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில், 27 குடியிருப்புடன் கூடிய புதிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் ரூ.3.14 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 2015–16–ஆம் ஆண்டு 25 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.3.62 கோடி செலவில் கட்ட அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.4.5 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள்

2011 முதல் 2016 வரை ரூ.14.33 கோடி செலவில், 231 புதிய கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 182 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் ரூ.11.69 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. முதன்முறையாக மாநிலத்தில்

உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களையும் புனரமைத்திட முடிவு செய்து முதற்கட்டமாக **5,000** கிராம நிர்வாக அலுவலகங்களை புனரமைத்திட தலா **ரூ.50,000/–** வீதம் ரூ.**25** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2015–16–ஆம் ஆண்டு இரண்டாம் கட்டமாக **3,000** கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களை புனரமைக்க தலா **ரூ.50,000/–**வீதம்
ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.5 நில வருவாய்

தமிழ்நாட்டில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| நிலவகைப்பாடு | பரப்பளவு |
|---|---|
| நஞ்சை நிலங்கள் | **16,57,676** ஹெக்டேர் |
| புஞ்சை நிலங்கள் | **67,80,080** ஹெக்டேர் |

தமிழ்நாட்டிலுள்ள பல வகையான நிலங்களுக்கு கீழ்கண்டவாறு நிலவரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | விவரம் | தொகை / ஹெக்டேர் |
|---|---|---|
| 1 | புஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.5/– |
| 2 | நஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.12/– |
| 3 | ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை | ரூ.12/– |
| 4 | பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை | ரூ.1/– |

வருவாய் தீர்வாய நிகழ்வின் மூலம் அனைத்து வருவாய் கணக்குகளும் ஜமாபந்தி திட்டத்தில் முடிக்கப்படுகின்றன. நில வருவாய் ஒவ்வொரு பசலி வருடமும், ஜுலை 1 ஆம் தேதி முதல் ஜுன் 30 வரை வசூலிக்கப்படுகிறது. 1424 பசலி வருடத்தில் (2014–15), நிலுவை நிலவரியினையும் சேர்த்து மொத்த நிலவரி ரூ.14.26 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. 1425 பசலி வருடத்திற்கான (2015–16) உத்தேச நிலவரி கேட்பு ரூ.5.69 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## 2.6 அம்மா திட்டம்

"**அம்மா திட்டம்**" (அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குதல்) **(Assured Maximum service to Marginal people in All villages)** என்ற புதுமையான திட்டமானது 24.2.2013 முதல் வருவாய்த்துறையின் மூலம் துவக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய வருவாய்த் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சரின் மிக சிறந்த ஆளுமைக்கான விருது (Best Practices Award for Improvement of Quality Delivery System Ensuring Good Governance) ஆகஸ்ட் 15, 2013 அன்று வழங்கப்பட்டது. தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்களும் மற்றும்

நகர்ப்புறங்களில் வாழும் மக்களும் பயனடையும் வகையில் அம்மா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் முகாம் நடத்துவதற்கு கால அட்டவணை தயாரிக்கப்பட்டு அக்கிராமங்களில் பிரதி வாரம் வெள்ளிக்கிழமை தோறும், வட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் முகாமிட்டு, அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பெறுவது குறித்த வழிகாட்டுதல்களை அளிப்பதோடு மட்டுமல்லாது, அவை மக்களுக்கு அவரவர் இருப்பிடத்திலேயே வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது **மக்களைத் தேடி வருவாய்த்துறை** என்ற வகையில் கிராமங்களுக்கே அதிகாரிகள் நேரில் சென்று அவர்களது குறைகளை அங்கேயே நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தின் சிறப்பம்சம், முகாம் நடைபெறும் நாளில் பெறப்படும் மனுக்களில் தகுதியான மனுக்களின் மீது உரிய ஆணை உடன் பிறப்பிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்மா திட்டம் முகாமினை நடத்துவதற்கு ஒவ்வொரு முகாமிற்கும் ரூ.5,000/– வீதம் ரூ.14,63,57,500/– வழங்கப்பட்டுள்ளது.

அம்மா திட்டத்தின் மூலம் கடந்த நான்கு கட்டங்களில், மாநிலத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களில் நடைபெற்ற முகாம்களில் **53,97,925** மனுக்கள் பெறப்பட்டு **53,55,334** மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

### 2.6.1 மக்கள் குறை தீர்க்கும் திட்டம்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள்/ வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர். மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் பயன்களை முழுமையாக கண்காணிப்பதற்கு ஒரே சீராக பயன்படுத்தும் வகையிலான பொதுவான ஒரு மென்பொருள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மூலமாக மனுக்களின் நிலையினை இணையதளத்தின் வழியாக அறியலாம்.

### 2.6.2 மக்கள் தொடர்பு முகாம்

மக்கள் தொடர்பு முகாம் திட்டமானது மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று நடத்தப்படுகிறது. இத்திட்டம் மிகவும் தொலைவில் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நாளில் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழு அக்கிராமத்திற்கு சென்று குறைகளை நேரில் கேட்டறிந்து, கிராம பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காண்கின்றனர்.

மக்கள் தொடர்பு முகாம் மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.244, வருவாய் [வ.நி.3(2)] துறை, நாள் 8.8.2011–இன்படி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு முகாம் நடைபெறவுள்ள முந்தைய மாதத்தின் மூன்றாவது புதன் கிழமையன்று முகாம் நடைபெற இருக்கும் கிராமத்திற்கு சென்று மனுக்களைப் பெற்று அவற்றை சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து, மனுதாரர்களுக்கு அம்முகாம் நடைபெறும் நாளன்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

## 2.7 மின் ஆளுமை திட்டம்

வருவாய்த்துறையில் பொதுமக்களுக்கு விரைவில் சேவை அளிக்கும் வகையில் மின் ஆளுமை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி சான்று பெற பொது சேவை மையங்கள் மூலமாக எவ்விடத்திலும் எளிதில் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து வருமான சான்று, பிறப்பிடச் சான்று,

சாதிச்சான்று, முதல் பட்டதாரி சான்று மற்றும் ஆதரவற்ற மகளிருக்கான சான்று கோரி பெறப்படும் மனுக்கள் மின் ஆளுமை திட்டத்தின் மூலம் பெறப்பட்டு உரிய அலுவலர்களால் விரைந்து பரிசீலிக்கப்பட்டு டிஜிட்டல் முறையில் சான்றுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்றுகள் குறித்த நிலுவை இனங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு நடப்பு ஆண்டில் மொத்தமாக சுமார் 74,50,176 சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் பொது சேவை மையங்களில் ஆண்டுதோறும் பல புதிய சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வருவாய் நிர்வாக ஆணையரகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் அலுவலகங்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் அலுவலக நிருவாகப்பணிகளில் கடிதங்கள் பெறப்படுதல், கோப்புகளில் நடவடிக்கை நிலையினை கண்டறிதல், ஆய்வு செய்தல் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு, மின் ஆளுமையின் கீழ் கொண்டு வரப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

## 2.8 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரை காப்பாற்ற சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. ஆதரவற்ற மற்றும் ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயனடைந்து வருகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1,000/– ஆக 2011–ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2015–16–ஆம் ஆண்டிற்கு ரூ.3,962.81 கோடியாக உயர்ந்துள்ளது. 31.3.2016 அன்று 30.74 இலட்சம் பயனாளிகள் கீழ்க்காணுமாறு பயன்பெற்று வருகின்றனர்.

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31.3.2016 வரை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 1359010 |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 58355 |
| 3 | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 558073 |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 207422 |
| 5 | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 425335 |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 321493 |
| 7 | ஆதரவற்ற/ கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 118909 |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21165 |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | 4461 |
| | **மொத்தம்** | **30,74,223** |

**மத்திய அரசு கீழ்க்காணும் ஓய்வூதிய திட்டங்களுக்கு பகுதியாக நிதி வழங்குகிறது**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தகுதிக்கான நிர்ணயம் | மத்திய அரசின் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 முதல் 79 வயது வரை | ரூ.200/– |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேல் | ரூ.500/– |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 முதல் 79 வயது வரை | ரூ.300/– |
| 3 | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 40 முதல் 79 வயது வரை | ரூ.300/– |

பயனாளிகளின் நலனை கருத்திற் கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், **1962–**ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் படியான ஆதரவற்றோருக்கான நிபந்தனைகளை தளர்த்தி வயது வந்த மகன் / மகள் இருந்தாலும் அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வரும் பட்சத்தில் அவர்களும் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருந்தால் ஓய்வூதியம் பெறும் வகையில், ஏப்ரல் **2015–**இல் அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், அவர்களின் அசையாத

சொத்தின் மதிப்பு ரூ.5,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு, தற்பொழுது ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.27, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 22.2.2016–இன்படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும், ஊனத்தின் தன்மை 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக குறைத்தும் ஊனமுற்றோருக்கு ஓய்வூதியம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

உயிர் புள்ளி அட்டையைப் பயன்படுத்தி, பயனாளிகளை உறுதி செய்து வங்கிகள் மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. 31.3.2016 அன்று மொத்தமுள்ள 30.74 இலட்சம் பயனாளிகளில் 23.46 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் மூலமாகவும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் உள்ள

பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது.

- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.
- ❖ அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசி.

## 2.9 விபத்து நிவாரணத் திட்டம்

கட்டிடத் தொழில், விவசாயத் தொழில் போன்ற 44 வகையான உடலுழைப்பு தொழில்களில் ஈடுபட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த வருமானம் ஈட்டும் பிரதான நபர் விபத்தின் மூலம் மரணமடையும் போது வாரிசுதாரருக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை ரூ.15,000/– லிருந்து ரூ.20,000/– ஆக 31 டிசம்பர் 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### 2.9.1 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் இயற்கை மரணமடையும் பொருளீட்டக்கூடிய குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.10,000/– என்பதை ரூ.20,000/– ஆக 31 டிசம்பர் 2015 முதல் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### 2.10 விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் – பொங்கல் – 2016

2016 பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா சேலைகள்/ வேட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் 1,67,28,854 சேலைகளும் மற்றும் 1,67,19,123 வேட்டிகளும் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் அனைத்து தகுதியான பயனாளிகளும் பயன்பெறுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, தேசிய தகவலியல் மையத்தால் (NIC) பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மென்பொருளின் மூலம் இணையதளத்தில் பயனாளிகளின் விவரங்களை பதிவு செய்த பின்னரே பயனாளிகளுக்கு விலையில்லா சேலைகள்/ வேட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 2.11 பள்ளிகள் மூலமாக மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்

மாணவ/ மாணவியர்களுக்கு தேவைப்படுகின்ற பல்வேறு சான்றிதழ்கள் வருவாய்த்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், கல்வி உதவித்தொகை பெறுவதற்கும் அத்தியாவசியமான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் பிறப்பிடச் சான்றிதழ் ஆகிய இம்மூன்று சான்றிதழ்களும் பள்ளிகளின் மூலம் மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண்.184, வருவாய்த் [வ.நி 3(2)] துறை, நாள் 5.6.2012–இன் படி, மேற்கண்ட சான்றிதழ்கள் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் இடர்பாடுகளை நீக்கும் வகையில், 6–ஆம் வகுப்பு மாணவ/ மாணவியர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகள் மூலமாகவே, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2015–16–ஆம் கல்வி ஆண்டில், மேற்குறிப்பிட்ட சான்றுகள் வழங்கும் பணி இணையதளம் மூலம் செயல்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இக்கல்வியாண்டில், 2,37,882 வருமான சான்றிதழ்களும், 3,57,318 சாதி சான்றிதழ்களும் மற்றும் 2,78,634 பிறப்பிடச்

சான்றிதழ்களும் ஆக மொத்தம் **8,73,834** சான்றிதழ்கள் பள்ளிகள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.12 தேசிய மக்கள் தொகை பதிவேடு – உயிர் புள்ளி பதிவு செய்தல்

உயிர் புள்ளி பதிவு செய்யும் பணியில் (5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட) ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு (உயிர் புள்ளி) ஆகியவை பல்வேறு கட்டங்களாக பதிவு செய்யப்படுகிறது. இப்பணி வருவாய்த்துறையின் பங்களிப்புடன் பாரத மின்னணுக் கழகம், பெங்களூரு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணிமுன்னேற்றம் குறித்து மாநில ஒருங்கிணைப்பாளர் (State Co-ordinator)/ முதன்மைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு **2011**–இன்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான **7.21** கோடியில், **31.3.2016**–இல் இதுவரை **6,76,98,914** நபர்களுக்கு பதிவுப்பணி மேற்கொள்ளப்பட்டு, **6,15,02,930** நபர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்த மக்கள் தொகையில் இதுவரை பதிவுப்பணி **93.83%** மற்றும் ஆதார் அட்டைகள் வழங்கும் பணி **85.25%** முடிக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 2.3

## தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR- BME) மற்றும் ஆதார் அட்டைகள் 31.3.2016 வரை வழங்கப்பட்ட விவரப்பட்டியல்

| வ. எண் | மாவட்டம் | உயிர் புள்ளி கணக்கெடுப்பு எடுக்க வேண்டிய மொத்த நபர்கள் | 31.03.16 வரை கணக் கெடுக்கப் பட்ட மொத்த நபர்கள் | கணக் கெடுப்பு சதவீதம் | 31.03.16 வரை விநியோகிக்கப் பட்ட மொத்த ஆதார் அட்டைகள் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் | 1942288 | 1837534 | 94.61 | 1770795 | 91.17 |
| 2 | அரியலூர் | 754894 | 764273 | 101.24 | 686762 | 90.97 |
| 3 | திருநெல்வேலி | 3077233 | 3037962 | 98.72 | 2796148 | 90.87 |
| 4 | தருமபுரி | 1506843 | 1493238 | 99.10 | 1368107 | 90.79 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 2722290 | 2611424 | 95.93 | 2462489 | 90.46 |
| 6 | மதுரை | 3038252 | 2773665 | 91.29 | 2721860 | 89.59 |
| 7 | பெரம்பலூர் | 565223 | 619251 | 109.56 | 506198 | 89.56 |
| 8 | கன்னியாகுமரி | 1870374 | 1707954 | 91.32 | 1671224 | 89.35 |
| 9 | கரூர் | 1064493 | 1021653 | 95.98 | 946771 | 88.94 |
| 10 | தேனி | 1245899 | 1229268 | 98.67 | 1098589 | 88.18 |
| 11 | ஈரோடு | 2251744 | 2178894 | 96.76 | 1983572 | 88.09 |
| 12 | சேலம் | 3482056 | 3348586 | 96.17 | 3063369 | 87.98 |
| 13 | திருவள்ளூர் | 3728104 | 3320959 | 89.08 | 3257571 | 87.38 |
| 14 | புதுக்கோட்டை | 1618345 | 1620085 | 100.11 | 1409271 | 87.08 |
| 15 | தூத்துக்குடி | 1750176 | 1686039 | 96.34 | 1523179 | 87.03 |
| 16 | நீலகிரி | 735394 | 723325 | 98.36 | 635772 | 86.45 |
| 17 | நாகப்பட்டினம் | 1616450 | 1448638 | 89.62 | 1395780 | 86.35 |
| 18 | காஞ்சிபுரம் | 3998252 | 3530609 | 88.30 | 3427620 | 85.73 |
| 19 | திண்டுக்கல் | 2159775 | 1995186 | 92.38 | 1847443 | 85.54 |
| 20 | வேலூர் | 3936331 | 3657892 | 92.93 | 3352834 | 85.18 |
| 21 | நாமக்கல் | 1726601 | 1593884 | 92.31 | 1469039 | 85.08 |
| 22 | திருவாரூர் | 1264277 | 1125807 | 89.05 | 1070938 | 84.71 |
| 23 | கோயம்புத்தூர் | 3458045 | 3156897 | 91.29 | 2929067 | 84.70 |
| 24 | தஞ்சாவூர் | 2405890 | 2214304 | 92.04 | 2021742 | 84.03 |
| 25 | கடலூர் | 2605914 | 2382513 | 91.43 | 2185249 | 83.86 |
| 26 | சிவகங்கை | 1339101 | 1268237 | 94.71 | 1114729 | 83.24 |
| 27 | விழுப்புரம் | 3458873 | 3106695 | 89.82 | 2865944 | 82.86 |
| 28 | திருவண்ணாமலை | 2464875 | 2382755 | 96.67 | 2036186 | 82.61 |
| 29 | கிருஷ்ணகிரி | 1879809 | 1773555 | 94.35 | 1532678 | 81.53 |
| 30 | இராமநாதபுரம் | 1353445 | 1260332 | 93.12 | 1052334 | 77.75 |
| 31 | சென்னை | 4646732 | 4652813 | 100.13 | 3472712 | 74.73 |
| 32 | திருப்பூர் | 2479052 | 2174687 | 87.72 | 1826958 | 73.70 |
| | **மொத்தம்** | **72147030** | **67698914** | **93.83** | **61502930** | **85.25** |

## 2.13 பேரிடர் மேலாண்மை

இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்த்திடும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதிலும் இவ்விடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதிலும் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை மிக முக்கிய பங்காற்றி வருகிறது. இத்துறையானது பல்வேறு இயற்கை இடர்பாடுகளின் போது அரசினால் மேற்கொள்ளப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கிறது.

### 2.13.1 மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

2005–ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை சட்டத்தின்படி, மாநிலத்தில் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராக கொண்ட 'மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்' (State Disaster Management Authority) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாணையரகத்திற்கு உதவுவதற்காக மாநில அளவிலான செயற்குழு (State Executive Committee) ஒன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.13.2 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை

அரசாணை (நிலை) எண்.488, வருவாய்த்துறை, நாள் 28.11.2013–இன்படி தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையை உருவாக்கி அதனை 1975–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்ய அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை 9.1.2014 அன்று முதல் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், இம்முகமைக்கான கழகப் புரிந்துணர்வு மற்றும் துணை விதிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இம்முகமையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகவும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரை துணைத் தலைவர்களாகவும், 14 அரசு செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையரை அமைப்பாளராகவும் கொண்ட நிருவாகக் குழு நிருவகிக்கிறது. இது தவிர, இம்முகமைக்கென முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையரை தலைவராகவும் மற்றும் 9 பிற உறுப்பினர்களையும் கொண்ட செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டதுடன், சங்கத்தின் உறுப்பினர் செயலாளர் மற்றும் இயக்குநர் (பேரிடர் மேலாண்மை)

அவர்களை இச்செயற்குழுவிற்கு குழு கூட்டுநராகவும் அரசு நியமித்துள்ளது.

துடிப்பான பேரிடர் மேலாண்மை பணியாளரமைப்பின் மூலமாக, அனைத்து விதமான பேரிடர்களின் எதிர்மறை பாதிப்புகளை குறைப்பதுடன், உயிர், உடமைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதாரத்தை குறைப்பதும், பேரிடர்கள்/ இயற்கை இடர்பாடுகளால் மாநிலம் பெற்றுள்ள பொருளாதார வளர்ச்சி நிலை பாதிக்கப்படாமல் காப்பதும் இம்முகமையின் முதன்மை நோக்கமாகும். மாநில அளவில் பேரிடர் நிகழ்வு தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயல் முகமையாக செயல்படுவதே இம்முகமையின் முதன்மைப் பணியாகும். இம்முகமையில் பேரிடர் மேலாண்மை, பேரிடர் தணிப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ரூ.1,481.80 கோடி மதிப்பீட்டில் கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டம் (CDRRP) உலக வங்கியின் நிதி உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேரிடர் மேலாண்மை தொடர்பான பணிகளை மாவட்ட அளவில் செயல்படுத்திட ஏதுவாக மாவட்ட அளவில், ‘மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்’ (District Disaster

Management Authority) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

## 2.14 மாநில பேரிடர் மேலாண்மை திட்டம்

2004–ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்திற்கான பேரிடர் மேலாண்மை கொள்கையினை வெளியிட்டார். இக்கொள்கை மாநிலத்தின் பேரிடர் மேலாண்மைக் குறித்து முழுமையான ஆவணமாக உள்ளது. மேலும், பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005–இன்படி மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.14.1 மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம்

பேரிடர் மேலாண்மை சட்டம் 2005–இன்படி மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம், அனைத்து மாவட்டங்களுக்கும் தயாரிக்கப்பட்டு, ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.14.2 தேசிய பேரிடர் மேலாண்மை சேவை முன்மாதிரி திட்டம்

பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்புத் துறை அலுவலகத்தில் இயங்கி வரும் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களிலும் துணைக்கோள் உதவியுடன் கூடிய தொலைத் தொடர்பு வலைப்பணி, கட்டுமானங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வலுவூட்டுவதற்கு ஏதுவாக தேசிய பேரிடர் மேலாண்மை சேவை வழிகாட்டி திட்டம் ஒன்றினை செயல்படுத்த, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

## 2.15 பருவமழை குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

வடகிழக்கு பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலையை ஆய்வு செய்யும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி தலைமைச் செயல£÷ர் தலைமையில் தொடர்புடைய துறைகளின் உயர்மட்ட அலுவலர்கள் பங்கேற்கும் கூட்டம் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியோரை உள்ளடக்கிய மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்படுவதுடன் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணைய கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. இக்கூட்டத்தில் பெறப்படும் ஆலோசனைகள் மற்றும்

கருத்துக்களின் அடிப்படையில், பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, காவல் துறை, பொது சுகாதாரத்துறை மற்றும் பல்வேறு அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்கும் மாதிரி ஒத்திகை பயிற்சிகளும் (Mock Drill) நடத்தப்படுகின்றன.

### 2.15.1 மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம்

“மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம்” (State Emergency Operation Centre) மாநில நிவாரண ஆணையர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஆண்டு முழுவதும் செயல்படுகிறது. இம்மையத்தில் இயற்கை இடர்பாடுகளின்போது பேரிடர்கள் தொடர்பாக முன்னறிவிப்பு தகவல்கள் பெறப்படுவதுடன், உரிய தொடர் நடவடிக்கைகளுக்காக சம்மந்தப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படுகிறது. இம்மையத்தில், காணொலிக் காட்சி வசதி, தொலைக்காட்சி, புயல் எச்சரிக்கை கருவி, தொலைபேசி, கணினி மற்றும் நிகரி வசதிகள் மட்டுமின்றி, பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக **1070** என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசி பயன்பாட்டில் உள்ளது. மாநில அவசரக்

கட்டுப்பாட்டு மையத்தில், 24 மணி நேரமும் அலுவலர்கள் பணியில் உள்ளனர்.

### 2.15.2 மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையம்

மாவட்ட அளவில், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் (District Emergency Operation Centre) செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களிலும் தொலைபேசி, நிகரி, கணினி வசதிகள் உள்ளதுடன், பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக **1077** என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசி பயன்பாட்டில் உள்ளது. இம்மையங்கள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பேரிடர் காலங்களில், தொலைத் தொடர்புகளை துரிதப்படுத்தும் நோக்கமாக, அனைத்து மாவட்டங்களுக்கும் வான் வழித் தொலைத் தொடர்பு (VHF) சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆகியவற்றின் முன்னறிவிப்பு களையும், அறிக்கைகளையும் தொடர்புடைய துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உடனடியாக அனுப்பி, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அவ்வப்போது தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பரவலாக **397** இடங்களில் மழைமானி நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் பதிவாகும் மழையளவு புள்ளி விபரங்கள் மாநில நிவாரண ஆணையர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நாள்தோறும் அகவலைதளம் (intra-site) மூலமாக பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இந்த மழைமானி நிலையங்கள், காலமுறைப்படி இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகளாலும், வருவாய்த் துறை அதிகாரிகளாலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

### 2.15.3 பேரிடரினால் பாதிக்கப்பட்டோருக்கான உயர்த்தப்பட்ட, நிவாரணத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, அரசாணை (நிலை) எண்.380, வருவாய்த்துறை, நாள் **27.10.2015**–இன் மூலம் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | நிவாரண உதவி | முந்தைய நிவாரண தொகை | அதிகரிக்கப்பட்ட நிவாரண தொகை |
|---|---|---|---|
| 1 | மனித உயிரிழப்பிற்கு | ரூ.1,50,000 | ரூ.4,00,000 |
| 2 | உடல் உறுப்பு இழப்பிற்கான நிவாரணம் (கண் அல்லது கால்) | ரூ.35,000 (40% முதல் 75% உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு) | ரூ.59,100 (40 % முதல் 60 % உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு) |
| | | ரூ.50,000 (75 %-க்கு மேல் உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு) | ரூ.2,00,000 (60 %-க்கு மேல் உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு) |
| 3 | படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நபர்களுக்கான நிவாரணம் | ரூ.7,500 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சை பெறுபவர்களுக்கு) | ரூ.12,700 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சை பெறுபவர்களுக்கு) |
| | | ரூ.2,500 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்குள் சிகிச்சை பெறுபவர்களுக்கு) | ரூ.4,300 (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்குள் சிகிச்சை பெறுபவர்களுக்கு) |
| 4 | **கால்நடை சேதம்** | | |
| அ) | கறவை இனங்கள் (பசு, எருமை) | ரூ. 20,000 | ரூ. 30,000 |
| ஆ) | எருது/ ஒட்டகம் முதலியன | ரூ.10,000 | ரூ.25,000 |
| இ) | கன்று/ கழுதை முதலியன | ரூ.5,000 | ரூ.16,000 |
| ஈ) | ஆடு/ செம்மறியாடுகள் | ரூ.2,000 | ரூ.3,000 |
| 5 | **வேளாண் துறை** | | |
| அ) | வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை தூர்வாருதல் | ரூ.6,000 ஹெக்டேர் ஒன்றுக்கு | ரூ.12,200 ஹெக்டேர் ஒன்றுக்கு |
| ஆ) | மலைப்பகுதியிலுள்ள விளை நிலங்களில் இடிபாடுகளை அப்புறப்படுத்துவதற்கு | ரூ.6,000 ஹெக்டேர் ஒன்றுக்கு | |
| இ) | மீன் பண்ணைகள் தூர்வாருதல்/ சீரமைப்பு/ புனரமைப்பு | ரூ.6,000 ஹெக்டேர் ஒன்றுக்கு | |
| ஈ) | நிலச்சரிவு/ பனிச்சரிவு/ ஆற்றுப்போக்கு மாற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு | ரூ.15,000ஹெக்டேர் ஒன்றுக்கு | ரூ.37,500 ஹெக்டேர் ஒன்றுக்கு |
| 5 (அ) | **பாதிப்புக்குள்ளான வேளாண், தோட்டக்கலை மற்றும் நீண்ட காலப் பயிர் இனங்களுக்கு இடு பொருள் மானியத் தொகை** | | |
| | **பயிர்** | **50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் சேதமடைந்த பயிர்களுக்கு** | **33 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் சேதமடைந்த பயிர்களுக்கு** |
| அ) | பாசன வசதி அற்ற நிலங்களில் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு | ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு | ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு |
| ஆ) | பாசன வசதி பெற்ற நிலங்களில் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு | ரூ.9,880 ஹெக்டேர் ஒன்றுக்கு | ரூ.13,500 ஹெக்டேர் ஒன்றுக்கு |
| இ) | நீண்ட கால பயிர்களுக்கு | ரூ.9,880 ஹெக்டேர் ஒன்றுக்கு | ரூ.18,000 ஹெக்டேர் ஒன்றுக்கு |
| ஈ) | பட்டுபூச்சி வளர்ப்பிற்கு | ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு | ரூ.7,410 ஹெக்டேர் ஒன்றுக்கு |

| வ. எண் | நிவாரண உதவி | முந்தைய நிவாரண தொகை | அதிகரிக்கப்பட்ட நிவாரண தொகை |
|---|---|---|---|
| 6 | மீன்வளம் | | |
| அ) | பகுதி சேதம் அடைந்த கட்டுமரங்களை பழுது நீக்கம் செய்தவற்கான நிவாரணம் | ரூ.2,500 | ரூ.10,000 |
| ஆ) | முழுமையாக சேதம் அடைந்த கட்டுமரங்களை பழுது நீக்கம் செய்தவற்கான நிவாரணம் (வலை உட்பட) | ரூ.7,500 | ரூ.32,000 |
| இ) | பகுதி சேதம் அடைந்த எப்.ஆர்.ப்பி வல்லங்களுக்கு | –– | ரூ.20,000 |
| ஈ) | முழுவதுமாக சேதம் அடைந்த/ காணாமல் போன எப்.ஆர்.ப்பி வல்லங்களுக்கு | –– | படகின் விலை ரூ. 1.50 இலட்சம் என்ற கணக்கீட்டின் படி 50 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.75,000 |
| உ) | பகுதி சேதம் அடைந்த இயந்திர படகுகளுக்கு | – | 60 விழுக்காடு மானியம் என்ற அடிப்படையில் படகு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3,00,000 |
| ஊ) | முழுவதுமாக சேதம் அடைந்த/ காணாமல் போன இயந்திர படகுகளுக்கு | – | 35 விழுக்காடு மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக படகு ஒன்றுக்கு ரூ.5,00,000 |
| எ) | கில்நெட் வலைகளுக்கு | – | ரூ.10,000 வலை ஒன்றுக்கு |
| ஏ) | ஒ.பி.எம்./ ஐ.பி.இ. இயந்திரங்கள் பழுது பார்ப்பதற்கு | – | ரூ.5,000 (இயந்திரம் ஒன்றுக்கு) |
| ஐ) | மீன் வளர்ப்பு பண்ணைகளுக்கு இடுபொருள் மானியமாக | ரூ.4,000 (ஹெக்டேர் ஒன்றுக்கு) | ரூ.8,200 (ஹெக்டேர் ஒன்றுக்கு) |
| 7 | கைவினைஞர்கள்/ நெசவாளர்களுக்கான நிவாரணம் | | |
| அ) | கைவினைஞர்களுக்கான உபகரணங்கள் இழப்பிற்கு | ரூ.2,000 (தொழிலாளர் ஒருவருக்கு) | ரூ.4,100 (தொழிலாளர் ஒருவருக்கு) |
| ஆ) | கைவினைஞர்களின் மூலப் பொருட்கள்/ முழுமையடைந்த தயாரிப்பு பொருட்கள் இழப்பிற்கு | ரூ.2,000 (தொழிலாளர் ஒருவருக்கு) | ரூ.4,100 (தொழிலாளர் ஒருவருக்கு) |
| 8 | குடிசைகளுக்கான நிவாரணம் | | |
| அ) | முழுமையாக சேதமடைந்த நிரந்தர வீடுகளுக்கு | ரூ. 25,000 | ரூ.95,100 (வீடு ஒன்றுக்கு) சமவெளி பகுதிக்கு) ரூ.1,01,900 (வீடு ஒன்றுக்கு) மலைப்பகுதிக்கு |
| ஆ) | பகுதியாக சேதமடைந்த நிரந்தர வீடுகளுக்கு | ரூ.1,,500 (வீடு ஒன்றுக்கு) | ரூ. 5,200 (வீடு ஒன்றுக்கு) |
| இ) | சேதம் அடைந்த குடிசைகளுக்கு | ரூ.2,000 (குடிசை ஒன்றுக்கு) | முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ. 5,000 |
| | | | பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.4,100 |
| ஈ) | வீட்டுடன் கூடிய கால்நடை பட்டிகளுக்கு | –– | ரூ.2,100 பட்டி ஒன்றுக்கு |

### 2.15.4 பருவமழை 2015

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு **920.9** மிமீ ஆகும். இருப்பினும் **2015** ஆம் ஆண்டு தமிழகத்திற்கு **1212.00** மிமீ மழை கிடைக்கப் பெற்றுள்ளது. இது ஆண்டு சராசரி மழை அளவைக் காட்டிலும் **32** விழுக்காடு அதிகமாகும். **2015** ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தின்போது **286.5** மிமீ மழை பெய்துள்ளது. இது அக்காலத்தில் இயல்பான மழையளவான **321.2** மிமீ–ஐ விட **11** விழுக்காடு குறைவாகும். தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழையானது அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்கிறது. **2015**–ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை **28.10.2015** அன்று தொடங்கியது. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் **673.3** மிமீ மழை பெய்துள்ளது. இது அப்பருவ காலத்தின் இயல்பான மழையளவான **440.4** மிமீ மழையைவிட **53** விழுக்காடு அதிகமாகும்.

### 2.15.5 வடகிழக்கு பருவமழை 2015–இன் போது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் மற்றும் துரித நடவடிக்கைகளின் காரணமாக **2015** பருவமழையின் போது ஏற்பட்ட வெள்ள

பாதிப்புகள் பெருமளவு குறைக்கப்பட்டதுடன் உயிர்சேதமும் தவிர்க்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை கண்காணித்ததுடன் நேரடியாக சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **16.11.2015** அன்று நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தார்கள். **3.12.2015** அன்று வான் வழியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களை பார்வையிட்டு நிவாரண மற்றும் மீட்புப் பணிகளை விரைவுபடுத்தினார்கள். அவ்வாறே மீட்பு மற்றும் நிவாரண பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டன.

**நிவாரண முகாம்கள்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி வடகிழக்கு பருவமழை **2015** வெள்ளத்தின் போது, பாதிக்கப்பட்ட **23.51** லட்சம் நபர்கள் மீட்கப்பட்டு **7,244** நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு

உணவு, குடிநீர், மருத்துவ உதவிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டது. மொத்தம் 1.36 கோடி உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் மற்றும் இளம் சிறார்களுக்கும் 690 மெட்ரிக் டன் பால் பவுடர் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருந்தவர்களில் 5 இலட்சம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நாப்கின்கள் மற்றும் டயாப்பர்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மழை வெள்ளத்தின்போது பட்டா, கல்விச் சான்றுகள், ஆதார் அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், வங்கி கணக்கு புத்தகங்கள், வாகன பதிவுச் சான்றுகள், ஓட்டுநர் உரிமங்கள், போன்ற முக்கிய ஆவணங்களை இழந்தவர்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டன. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த 37,707 மாணவ மாணவியர்களுக்கு பாட புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள் மற்றும் ஒரு செட்டு பள்ளி சீருடைகள் இலவசமாக

வழங்கப்பட்டன. 31,320 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 32.46 இலட்சம் பேருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

### 2.15.6 நிவாரண பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வெள்ள நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்காக தமிழக அரசு பல்வேறு நிதியிலிருந்து ரூ.3,039.24 கோடி ஒதுக்கீடு செய்து போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக வெள்ள பாதிப்பிலிருந்து ஒரு சில நாட்களில் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை மீட்டு தரப்பட்டது.

| வ. எண் | அரசாணை எண் மற்றும் நாள் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | அரசாணை எண்.403, வருவாய்த் (பே.மே–II) துறை, நாள் 17.11.2015 | 500.00 |
| 2. | அரசாணை எண் 431, வருவாய்த் (பே.மே–II) துறை, நாள் 15.12.2015 | 300.00 |
| 3. | அரசாணை எண் 430, வருவாய்த் (பே.மே–II) துறை, நாள் 15.12.2015 | 1000.00 |
| 4. | அரசாணை எண் 15, வருவாய்த் (பே.மே– II) துறை, நாள் 07.01.2016 | 500.00 |
| 5. | அரசாணை எண் 25, வருவாய்த் (பே.மே– II) துறை, நாள் 11.01.2016 | 340.79 |
| 6. | அரசாணை எண் 84, வருவாய்த் (பே.மே–II) துறை, நாள் 15.02.2016 | 398.44 |
| | **மொத்தம்** | **3039.24** |

வெள்ள பாதிப்புகள் குறித்து மதிப்பீடு செய்ய தமிழகம் வந்த மத்திய குழு, வெள்ள பாதிப்புகளை சீர்செய்ய தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பாராட்டு தெரிவித்தது.

## 2.16 கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டம்

மாநிலத்தின் கடற்கரையை அடிக்கடி பாதிப்பிற்குள்ளாக்கும் பேரிடர்களின் அபாயத்தினை குறைப்பதற்காக தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டம், (Coastal Disaster Risk Reduction Project) என்ற திட்டத்தினை ரூ.1,481.80 கோடி செலவில் தொடங்கியுள்ளது. இது ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட அவசரகால சுனாமி மறு கட்டமைப்பு திட்டத்தின் தொடர்ச்சியாகும். இத்திட்டத்திற்கான முக்கூட்டு ஒப்பந்தமானது உலக வங்கி, இந்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறை மற்றும் தமிழ் நாடு அரசு ஆகியவற்றிற்கிடையே **11.11.2013** அன்று புது டெல்லியில் கையெழுத்தாகியுள்ளது. அரசாணை (நிலை) எண்.23, வருவாய்த்துறை, நாள் **21.1.2014** மூலம் ரூ.1,481.80 கோடிக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

# கடலோர பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டத்தில் உள்ள அம்சங்கள்

| வ.எண் | விவரிப்பு | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| I பேரிடர் அபாயம் குறைப்பு நடவடிக்கைகள் | | 1035.00 |
| அ | கடலோர கிராமங்களில் பலவகை அபாயங்களை தாங்கக் கூடிய பாதுகாப்பான வீடுகள் கட்டுதல் | 285.00 |
| ஆ | பாதுகாப்பாக மக்களை வெளியேற்றுவதற்காக பெயர்ப்பலகை தாங்கிய வழிகளை அமைத்தல் | 25.00 |
| இ | பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் (121 இடங்களில்) | 315.00 |
| ஈ | முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல் (439) | 50.00 |
| ஊ | கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கன்னியில் தரைக்கு மேலுள்ள மின்கம்பிகளை பூமிக்கு அடியில் கேபிள்கள் மூலம் பதித்தல் | 360.00 |
| II. மீன்வளத்துறை பணிகள் | | 321.30 |
| அ | நிலைநிறுத்தப்பட்ட மீன்வளப் பணிகள் / புதிய பணிகள் | 210.30 |
| ஆ | FIMSUL II<br>நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை II | |
| | 1. கடல் மீன்வள மேம்பாட்டினை செயல்படுத்துதல் | 23.74 |
| | 2. அறிவுத்திறன் மற்றும் தகவல்களை மேம்படுத்துதல் | 5.00 |
| | 3. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவி செய்தல் | 6.14 |
| | 4. மேலாண்மைக்கான நிதியுதவி | 3.98 |
| இ | புதிய மீன்பிடி கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி செய்து கொடுத்தல். | 62.14 |
| ஈ | கடல் துறைமுகங்கள் குறித்து ஆய்வு செய்தல் | 10.00 |
| III. பேரிடர் எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடு பணிகள் | | 52.50 |
| அ | மாநில பேரிடர் மேலாண்மை மையம் அமைத்தல் | 10.00 |
| ஆ | உலகளாவிய தகவல் தொழில் நுட்பத்தினை உள்ளடக்கிய பிரிவினை மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் அமைத்தல் | 17.50 |
| இ | சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம். | 15.00 |
| ஈ | பேரிடர் மேலாண்மை குறித்து பள்ளிகள் மற்றும் பயிற்சி மையங்களின் பாட திட்டங்களில் சேர்த்தல் | 2.50 |
| உ | ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் தயாரித்தல் | 7.50 |
| IV. திட்ட செயல்பாட்டிற்கான தொகை | | 73.00 |
| | மொத்தம் | 1481. 80 |

### 2.16.1 கடலோர சமூகத்திற்கான பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள்

### I. கடலோர கிராமங்களில் பலவகை அபாயங்களை தாங்கக் கூடிய பாதுகாப்பான வீடுகள் கட்டுதல்

கடலோரம் வசிக்கும் சமுதாயத்தினை பேரிடர் பாதிப்பிலிருந்து காக்கும் பொருட்டு **448** கடலோர வாழ்விடங்களில் **14,346** பாதுகாப்பான வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த பணி ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் செயல்படுத்தப்பட்டது.

### II. பாதுகாப்பாக மக்களை வெளியேற்றுவதற்கான சாலைகள் அமைத்தல்

கடற்கரை பகுதியிலிருந்து ஆபத்து காலங்களில் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான சாலைகள் வழிகாட்டுப் பலகையுடன் **143** கிராமங்களில் ரூ.**25** கோடி செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### III. பல்நோக்கு பாதுகாப்பு மையம் கட்டுதல்

கடலோரத்தில் வசிக்கும் மக்கள் ஆபத்துகாலங்களில் பாதுகாப்பான இடங்களில் தங்குவதற்காகவும் இதர காலங்களில் பொதுமக்கள் பள்ளியாகவோ அல்லது சமுதாய

கூடமாகவோ பயன்படுத்தும் வகையிலும் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் **121** இடங்களில் ரூ.**345** கோடி செலவில் பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டு வருகிறது. இதுவரை **72** பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **49** பாதுகாப்பு மையங்கள் கட்டுமானத்தில் பல்வேறு நிலையில் உள்ளன. அனைத்து பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகளும் இந்நிதியாண்டின் இறுதிக்குள் முடிவடைந்து விடும்.

## IV. முன்னெச்சரிக்கை கருவிகள் அமைத்தல்

தமிழ்நாடு நீர் மற்றும் காற்று அடிப்படையிலான பேரிடர்களால் பாதிப்பிற்கு இலக்காகும் கடற்கரையை கொண்டதாகும். எனவே முன்னெச்சரிக்கை கருவி (EWS) அல்லது பேரிடர் குறித்த அறிவிப்பு கருவி (DWAS) ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மாநில அளவில் அதன் செயல்பாட்டினை கண்காணிப்பு செய்யும் விதத்தில் ஒரு புதிய அமைப்பினை உருவாக்கி, இதன் மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு முன்னெச்சரிக்கை விவரங்களையும் பேரிடர் குறித்த செய்திகளையும் தேவைகேற்ப தெரிவிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பின் செயல்பாட்டினை சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் (CBDRM) மூலம் கடற்கரையில் வாழும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டமானது தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் திட்ட மேலாண்மை அலகின் மூலம் ரூ.50 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் செயல்படுத்த திட்ட மேலாளராக ELCOT நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

**V. நாகப்பட்டினம், கடலூர் மற்றும் வேளாங்கன்னி நகரங்களில் தரைக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை பூமிக்கு அடியில் நிறுவுதல்**

தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் விநியோக கழகமானது (TANGEDCO) கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கன்னி ஆகிய நகரங்களில் பூமிக்கு மேல் உள்ள உயர் மற்றும் தாழ்வழுத்த மின் இணைப்புகளை (HT & LT) பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.

2011–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட தானே புயல் காரணமாக கடலூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மிக அதிகமான உட்கட்டமைப்புகள் பாதிப்புக்குள்ளாயின. எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புகளை தவிர்க்கும் விதமாக நாகப்பட்டினம், வேளாங்கன்னி மற்றும் கடலூர் நகராட்சிகளில் ஒரு முன்னோடி முயற்சியாக பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புகளை பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியானது ரூ.360 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசனை நிறுவனம் உட்படுத்தப்பட்டு, ஏழு பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் மாதிரி ஒப்பந்தப் புள்ளி மீது உலக வங்கியின் ஒப்புதலும், சட்டப்பூர்வ அனுமதிகளும் பெற்ற பின் இப்பணிகளை செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதன் பின்பு இறுதி ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்.

### 2.16.2 மீன்வளத்துறை பணிகள்

தமிழ்நாடு கடலோர பகுதிகளில் 2004–ஆம் ஆண்டின் சுனாமியால் மீனவர்களும் மீன்வள உட்கட்டமைப்புகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன. மேற்படி பாதிப்புகளை சரி செய்ய தமிழ்நாடு அரசு பல்வேறு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும் இத்திட்டத்தில் நிலையான மீன்வளம் என்ற தலைப்பில் கீழ்க்கண்ட இரண்டு முக்கிய உட்கூறுகளின் கீழ் நடவடிக்கை எடுத்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

அ. உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும்

ஆ. நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL II)

## அ. மீன்வளத் துறையில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் குறிக்கோள் மீன்வளத்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் ஆகும். இதில் கீழ்கண்ட ஏழு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விவரம் |
|---|---|
| 1 | பரங்கிப்பேட்டை அன்னன்கோயில் கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் அமைத்தல் |
| 2 | வெள்ளாறு ஆற்றுமுகத்துவாரத்தை நிரந்தரமாக நிலை நிறுத்துதல் |
| 3 | நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகம் மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் |
| 4 | பழையார் மீன்பிடி துறைமுகம் மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் |
| 5 | நாகூர் புதிய மீன் இறங்குதளம் அமைத்தல் |
| 6 | உப்பனாறு ஆற்றுமுகத்துவாரத்தை நிரந்தரமாக நிலை நிறுத்துதல் |
| 7 | குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் சின்னமுட்டத்தில் கட்டுதல் (TUBE ICE PLANT) |

மேலும், இத்திட்டத்தில் மீன்வளத்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் தொடர்பான புதிய கீழ்காணும் மூன்று பணிகள் மேற்கொள்ளபடவுள்ளது. இப்பணிகள் தொடங்கி பல்வேறு நிலைகளில் உள்ளது.

| வ. எண் | பணியின் வகைகள் |
|---|---|
| 1 | தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்துதல் |
| 2 | தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல் |
| 3 | எட்டு கடலோர கிராமங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைப்பது குறித்து ஆய்வு செய்தல் |

## ஆ. நிலையான வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை (FIMSUL II)

இத்திட்டத்தின் கீழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவிகள் அளித்தல், கடல் மீன்வளத்தை மேம்படுத்துவது குறித்து மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்கள் ஆபத்துகாலங்களில் தங்களை காத்துக்கொள்ள பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது.

### I. கடல் மீன்வள மேம்பாட்டினை செயல்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் கடல் மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக மூன்று முன்மாதிரி பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு கூட்டு மேலாண்மை குழுக்கள் ஏற்படுத்தப்படவுள்ளது. பாக் நீரிணைப்பில், சூழல் அடிப்படையிலான மேலாண்மை பிரிவு, சென்னையில் மீன்பிடிதுறைமுக அடிப்படை மேலாண்மை பிரிவு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்வாழ் உயிரின பிரிவு என்றவாறு ஏற்படுத்துவதற்கு ரூ.500 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம் மாதிரிகளின் அடிப்படையில் இத்திட்டம் இதர கடலோர மாவட்டங்களில் 2016–17–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதற்காக கூட்டு மேலாண்மை குழு அமைக்கப்பட்டு இத்திட்டத்தை சிறந்த முறையில் பயனுள்ளதாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## II. அறிவுத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் தொழிற்முறை அறிவு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு துறை அலுவலர்களுக்கான பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இந்த பயிற்சியில் பொறுப்பான மீன்வளத்திற்கு நடத்தை விதிமுறைகள், மீன்பிடி புள்ளிவிவரங்கள், கடல் மீன்வள மேம்பாட்டிற்கான ஒழுங்குமுறை விதிகளை அமைத்தல், ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் பங்கேற்பு முறைகள் ஆகியவை அடங்கும். மேலும்,

2016–17–ஆம் ஆண்டில் அரசு ரூ.412 இலட்சத்தில் மீன்வளஆணையர் அலுவலகத்தில் உள்ள நூலகத்தை மேம்படுத்துவதற்காக நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், இதன்மூலம் மீன்வளத்துறை அலுவலர்கள் மற்றும் மீனவர்களுக்கான நடைமுறை விதிகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

## III. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவி செய்தல்

இத்திட்டத்தில் மீன்வளம் மற்றும் மீன்வளம் அல்லாத செயல்பாடுகளில் தொடர்புடையவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப்படவுள்ளது. இதில் பங்குதாரர்களுக்கு ஒரு தனிப்பட்ட வாழ்வாதாரத்திட்டத்தில் திறனை மேம்படுத்துதல், வியாபார உறுதுணை மற்றும் நிதியுதவி அளித்தல் போன்ற

நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. **2016–17–**ஆம் நிதியாண்டில் வியாபார தொடரமைப்பை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மேலும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக துறை அலுவலர்களுக்கும் மீனவ கூட்டுறவு உறுப்பினர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.

## IV. மேலாண்மைக்கான நிதியுதவி

இத்திட்டத்தின் கீழ் ரூ.4 கோடிக்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. திட்டத்திற்கான செயலாக்க அலகு அமைத்தல், தலைமையகம் மற்றும் களநிலையில் பணியாளர்களை நியமனம் செய்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது.

## V. மீனவர்களுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு ஏற்படுத்துதல்

மீனவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும் கால நிலை மாற்றங்கள் குறித்த தகவல்களை மீனவர்களுக்கு தெரியப்படுத்தவும், கம்பியில்லா தகவல்தொடர்பு வசதியினை அனைத்து கடலோர மாவட்டத்திற்கும் மீன்பிடி படகுகளில் பொருத்துவதற்கு ஏதுவாக ரூ.62.14 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசு, அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒரு கட்டுபாட்டு அறை 13 கடலோர மாவட்டங்களில் நிறுவ உத்தேசித்துள்ளது. இது அனைத்து கடலோர மாவட்டங்களில் உள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், மண்டல மீன்வளத் துறை அலுவலகம், மீன்வளத் துறை துணை/ இணை இயக்குநர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு செயல்படும். மேலும் கடற்கரை ஓரம் 5 கி.மீ சுற்றளவில் உள்ள BSNL தொலைபேசி நிறுவன கோபுரங்களை பயன்படுத்தி இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**2.17 பேரிடர் மேலாண்மை திறன் வளர்த்தல்**

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமையின் நிறுவன அமைப்பினை வலிமைப்படுத்துவதற்காக மாநில பேரிடர் மேலாண்மை மையம் ஒன்றினை ரூ.10 கோடி செலவில் உருவாக்கப்பட உள்ளது. ரூ.17.50 கோடி செலவில் GIS மையம் ஒன்றினை உருவாக்கி கொள்கை முடிவுகள் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே உருவாக்குவதற்காக பள்ளிப் பாடத்திட்டங்களில் இப்பாடத்திட்டம் சேர்க்கப்பட்டு வருகிறது.

### 2.17.1 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் (CBDRM)

இத்திட்டமானது பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் பேரிடர் அபாய குறைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாக பயன்படுத்தி கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் (SIRD) ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள முக்கியமான செயல்பாடுகள்:

அ) பேரிடர் அபாயம் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் குறித்து மதிப்பீடு செய்தல்

ஆ) சமூகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் திறன் மேம்பாடு

இ) முன்னெச்சரிக்கை கருவிகள் மற்றும் பாதுகாப்பு மைய கட்டடங்கள் பயன்பாட்டினை சமூகத்துடன் இணைத்தல் மற்றும்

ஈ) அவசர காலத்தினை எதிர்கொள்வதற்கான திறன்களை வலிமைபடுத்துதல்

### 2.17.2 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தின் குறிக்கோள்கள்

- ❖ கிராம அளவில் பேரிடர் மேலாண்மை திட்டத்தினை உருவாக்குவதன் மூலம் சமூகத்தின் பேரிடர் அபாயத்தினை குறைப்பது மற்றும் இயற்கை இடர்பாடுகளை தைரியமாகவும் எச்சரிக்கையுடனும் எதிர்கொள்வதற்கு தயார் படுத்துதல்.

- ❖ கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை குழுக்களை உருவாக்குதல் மற்றும் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் பேரிடர் மேலாண்மை குறித்த முக்கியத்துவத்தினை உணர்த்துதல். இத்திட்டத்தின் மூலம் கிராம அளவில் தேடுதல் மற்றும் மீட்பு குழு, முதலுதவி குழு, முன்னெச்சரிக்கை குழு ஆகியவற்றை உருவாக்கி இக்குழுக்களுக்கான பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- ❖ கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் உட்கட்டமைப்புகள் குறித்து

சமூகத்தின் அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ள செய்வதுடன் இப்பொது சொத்துகளை முறையாக பராமரிப்பது மற்றும் அவசரகாலங்களில் அவற்றை சிறப்பாக பயன்படுத்துவது குறித்தும் அறிந்து கொள்ள செய்தல்.

## 2.18 ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் தயாரித்தல்

இயற்கை வளங்களை பாதுகாக்கவும் மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மை திட்டம் தயாரித்தல், பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் தயாரித்தல் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சி திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் சுற்றுச் சூழல் துறை மூலமாக ரூ.**4.51** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும், மீதமுள்ள ரூ.**2.99** கோடி நிதியில் சுற்றுச்சூழல் துறை, அண்ணா பல்கலைகழகத்தின் IRS உதவியுடன் உள்ளூர் அளவில்

கடற்கரை பகுதிகள் மேலாண்மை திட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டப் பணிகள் முடிவுறும் போது, 13 கடலோர மாவட்டங்கள் எதிர்கொள்ளும் பேரிடர்களின் தாக்கத்தை தணிக்கும் வகையிலும், அனைத்து பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனை சமுதாயத்திற்கு வழங்குவதாகவும் அமையும்.

# 3. நில நிர்வாகம்

## 3.1 முன்னுரை

பொருளாதார மேம்பாட்டிற்கு, குறிப்பாக ஏழை மக்களின் நலன் பேணுவதற்கு, வலுவான மற்றும் ஒளிவுமறைவற்ற நில நிர்வாகம் இன்றியமையாததொன்றாகும். நில நிர்வாகத்துறை, முன்னாள் வருவாய் வாரியத்திலிருந்து உருவாக்கப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களை நிர்வகிப்பதுடன், வீட்டுமனை ஒப்படை, விவசாய நில ஒப்படை, நிலக்குத்தகை மற்றும் கேட்புத்துறை/ நிறுவனங்களுக்கு நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் போன்ற முக்கியப் பொருண்மைகளைக் கையாளுகிறது. மேலும், அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்நிலங்களின் பாதுகாப்பை இத்துறை உறுதி செய்கிறது. பொதுப் பயன்பாட்டிற்காகத் தேவைப்படும் தனியார் நிலங்களை நில எடுப்பு செய்வதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது. இவை மட்டுமின்றி, நில உடைமை தொடர்பான பதிவு மாற்றம் (பட்டா மாறுதல்) குறித்த முன்னேற்றத்தினையும் இத்துறை, கண்காணித்து வருகிறது.

நிலம் தொடர்பான வருவாய் நிலை ஆணைகள் மற்றும் பல்வேறு சட்டங்களின்கீழ், நில நிர்வாக ஆணையர், மேல்முறையீட்டு அதிகாரங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

மேலும், தொழில் நோக்கங்களுக்காக பாசன நீரைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணி மற்றும் சிறு பாசனக் கணக்கெடுப்பு ஒருங்கிணைப்பு அலுவலகமாகவும் இந்த ஆணையரகம் செயல்பட்டு வருகிறது.

மேற்காணும் பணிகளை நிறைவேற்ற, நில நிர்வாக ஆணையருக்கு மூன்று இணை ஆணையர்களும் ஐந்து உதவி ஆணையர்களும் துணை புரிகின்றனர். மாவட்ட அளவில் இப்பணிகள், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அவர்தம் பணியாளர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3.2 விரைவுப் பட்டா மாறுதல் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் **10.6.2011** நாளைய சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பட்டா மாறுதல் வேண்டி மனுதாரர்கள் அடிக்கடி செல்வதையும், கால தாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு நடைமுறையில் உள்ள பட்டா மாற்ற முறையை ஒழுங்குப்படுத்தும் வகையில், அரசாணை (நிலை) எண்.**209**, வருவாய்த்[நி.அ.1(1)]துறை, நாள் **9.7.2011**–இல் ஆணை வெளியிடப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவதற்கு ஏதுவாக வருவாய் நிலை

ஆணை எண்.31(8)–இல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டன. அவ்வரசாணையில், பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது குறித்த கால அளவிற்குள் நடவடிக்கை மேற்கொள்ள கால வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.210, வருவாய்த்[நி.அ.1(1)]துறை, நாள் 8.7.2011–இல் விரைவு பட்டா மாறுதல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவது குறித்தும், அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.7.2011 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

### 3.2.1 விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ❖ பட்டா மாறுதல் கோரும் மனுக்கள் கிராம நிர்வாக அலுவலரால் பெறப்பட்டு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது.
- ❖ உட்பிரிவு இல்லாத இனங்களில் 15 நாட்களிலும், உட்பிரிவு உள்ள இனங்களில் 30 நாட்களிலும் பட்டா மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

❖ பட்டா மாறுதல் விண்ணப்பங்களில் ஆணைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், இணைய தளம் மூலம் விவரங்கள் பெறப்பட்டு, காணொலிக் கூட்டம் மூலம் நில நிர்வாக ஆணையரால் ஆய்வு செய்யப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் **65,67,660** பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட வட்டங்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்படும் இணையவழி பட்டா மாறுதல் (Online Patta Transfer) நடைமுறை, தற்போது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய நடைமுறையினால், விரைவு பட்டா மாறுதல் திட்டத்தினை மேலும் வலுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் விதமாகவும், குடிமக்களுக்கான சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் ஏதுவாக அமையும்.

### 3.2.2 பதிவுத் துறையுடன் பட்டா மாற்றம் குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

சார்–பதிவாளர் அலுவலகங்கள் மூலம் பெறப்படும் பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்களைத் தீர்வு காணும் வகையில், வருவாய் மற்றும் பதிவு துறைகளை ஒருங்கிணைத்து செயல்பட ஒரு செயல்திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக,

1.7.2014 முதல் 30.6.2016 முடிய 31,00,665 பட்டா மாறுதல் குறித்த மனுக்கள் சார் பதிவாளர் அலுவலகங்கள் மூலமாக வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்பட்டுள்ளன. மேலும், சார்–பதிவாளர் அலுவலகங்கள் மூலம் பெறப்படும் பட்டா மாறுதல் கோரும் விண்ணப்பங்களை இணையவழி பட்டா மாறுதல் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.3 அரசு நில விவர வங்கி உருவாக்குதல்

தேசிய தகவல் மையத்தின் தொழில் நுட்ப உதவியுடன் அரசு நில விவர வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் நிலம் மென்பொருளில் "அ" பதிவேட்டில் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு, பிரத்யேக குறியீடு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், அரசு நில விவர வங்கி மூலமாக கிராமம், வட்டம் மற்றும் மாவட்டங்களில் நிலங்களின் வகைபாடு மற்றும் பரப்பளவு அடங்கிய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் இணைய வழி மூலமாகக் காணலாம். மேலும் முன்னோடித் திட்டமாக, பெரம்பலூர் மாவட்டத்தில், கணினியில் பதிவு செய்துள்ள கிராமப் புலப்படங்களை ஒருங்கிணைத்து, புவிக்குறியீட்டின் (Georeferencing) வாயிலாக, செயற்கைக் கோள் படங்களின் உதவியுடன், அரசு நிலங்களை எளிதில் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.4 தொன்மையான நிலப்பதிவுருக்களை கணினிமயமாக்கல் (Digitization)

எதிர்காலப் பயன்பாட்டிற்காக, தொன்மை வாய்ந்த நிலப்பதிவுருக்களை பாதுகாக்கும் பொருட்டு, முன்னோடித் திட்டமாக, சென்னை மாவட்ட ஆட்சியரகம் மற்றும் அதன் வட்ட அலுவலகங்களில் பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டம் (Digitization) துவங்கப்பட்டது. இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள நில ஆவணங்கள் மற்றும் ஆவணக் காப்பகத்தில் உள்ள ஒரிஜினல் செட்டில்மென்ட் ரிஜிஸ்டர்கள் (Original Settlement Registers) உள்ளிட்ட ஆவணங்கள் கணினி மயமாக்கம் செய்யப்பட்டன. நாளது தேதிவரையில், **11.95** இலட்சம் பக்கங்கள் கொண்ட பழைய நில ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன (Digitized).

நில நிர்வாக ஆணையரகத்தின் பதிவேடுகள், கோப்புகள் மற்றும் ரீசெட்டில்மென்ட் ரிஜிஸ்டர்கள் (Re-Settlement Registers) கணினி மயமாக்கப்படுவதற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.5 வீட்டுமனை ஒப்படை

கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதியுடைய வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. அம்மக்களின் தேவைக்கு கிராம நத்தம் நிலங்கள் போதுமானதாக இல்லாதபோது, ஆட்சேபகரமற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்ய, வருவாய் நிலை ஆணை எண் **21(6)**–இன்கீழ் வருவாய்க் கோட்ட அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, தகுதியுள்ள வீடில்லா ஏழைகளுக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

வருவாய் நிலை ஆணை எண் **21**–ன்கீழ், கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் ரூ.**30,000/**–க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், ஆண்டு வருமானம் ரூ.**50,000/**–க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா குடும்பத்தினர் இலவசமாக வீட்டுமனை பெறத் தகுதியுடையவராவர். இவ்வித வீட்டுமனைகள் குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே ஒப்படை செய்யப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, கிராமங்களில் மூன்று சென்ட் நிலம், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் நிலம், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் நிலம் என்ற அளவில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு, பல்வேறு வருவாய்த் துறை அலுவலர்களுக்கு, அரசாணை (நிலை) எண்.**248**, வருவாய்த்துறை, நாள் **28.7.2009**–இன் கீழ், வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பு (ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு) கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | அலுவலர்கள் | நிதி அதிகார உச்ச வரம்பு ( நில மதிப்பில்) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ.30,000/– வரை |
| 2 | கோட்டாட்சியர் | ரூ.50,000/– வரை |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– வரை |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– வரை |
| 5 | நில நிர்வாக ஆணையர் | ரூ.5,00,000/– வரை |
| 6 | அரசு | ரூ.5,00,000/– க்கும் மேல் |

வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், **2011–12**–ஆம் நிதியாண்டு முதல் **2015–16**–ஆம் நிதியாண்டு வரையில் **10,50,000** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி, மொத்தம் **12,57,645** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | இலக்கு | வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் |
|---|---|---|
| 2011 –2012 | 1,00,000 | 1,21,804 |
| 2012–2013 | 1,00,000 | 1,31,299 |
| 2013–2014 | 2,00,000 | 2,17,723 |
| 2014–2015 | 3,00,000 | 3,81,708 |
| 2015–2016 | 3,50,000 | 4,05,111 |
| **மொத்தம்** | **10,50,000** | **12,57,645** |

2016–17–ஆம் நிதியாண்டிலும், 3.50 இலட்சம் வீட்டு மனைகள் வழங்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3.6 நிலமாற்றம்

அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை எண்கள் 23 மற்றும் 23–ஏ ஆகியவற்றின்கீழ், மத்திய அரசுத் துறைகளுக்கும் மாநில அரசுத் துறைகளுக்கும் முறையே நிலக் கிரையம் வசூலித்துக் கொண்டும், நிலக் கிரையம் இன்றியும், நில மாற்றம் செய்யப்படுகின்றன. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்படின், கேட்புத் துறையானது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு மனுச் செய்து கொள்வதன் பேரில் கேட்புத் துறையின் தேவை, இருப்பிலுள்ள தகுதியுடைய நிலப்பரப்பு ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், உத்தேச நில

மதிப்பினை நிர்ணயம் செய்தும், உரிய முன்மொழிவினை, நில நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு மாவட்ட ஆட்சியர் அனுப்பி வைப்பார்.

மாநில அரசுத் துறைகளைப் பொறுத்தமட்டில், ஆட்சேபகரமான நிலங்கள், அதாவது நீர்நிலைப் புறம்போக்கு, மேய்ச்சல் தரை, சுடுகாடு, சாலைகள் போன்றவை நீங்கலாக, அத்தியாவசியத் தேவைகளுக்காக குறைந்தபட்ச நிலப் பரப்பினை நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சேபகரமான வகைபாடுடைய நிலங்கள் தொடர்பாக, நில நிர்வாக ஆணையரது பரிந்துரையின்பேரில் அரசு அளவில் உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

நிலமாற்ற இனங்களில், மேய்க்கால் (அல்லது) மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நிலமாற்றம் செய்யப்படும் பரப்புக்கு ஈடான மாற்று நிலம் வருவாய் மற்றும் கால்நடை பராமரிப்பு துறையினரால் கூட்டுப் புலத்தணிக்கை மூலம் கண்டறியப்பட வேண்டும். மேலும், மாற்று நிலத்தை மேய்ச்சல் தரையாக மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுக் கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,000/– அல்லது எக்டேர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி

அமைப்புக்கு கேட்புத்துறை செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பானது, மாற்று நிலத்தை மேம்படுத்தி கால்நடைகள் மேய்வதற்கு அனுமதிக்கும் வகையில், ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மேற்படி மாற்று நிலம் கால்நடைகள் மேய்வதற்கு மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்புவிக்கப்பட்டாலும், அந்நிலத்தின் உரிமை வருவாய்த் துறையிடம்தான் இருக்கும்.

அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படும் நிலங்கள் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அரசு நிலங்களுக்கு வருவாய்த்துறையே பாதுகாவலராக உள்ளபடியால், வழங்கப்பட்ட நிலங்களின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லையெனில், அந்த நிலங்களை மீளப் பெற்று, தேவையின் அடிப்படையில் இதர துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் வருவாய்த் துறைக்கு உள்ளது.

## 3.7 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்கள், வருவாய் நிலை ஆணை எண்.
**24**–இன்கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/ கழகங்கள்/ வாரியங்கள்/ பல்கலைக் கழகங்கள்

ஆகியவற்றிற்கும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. சில அரிதான நேர்வுகளில், பொது நலன் கருதி, தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை மற்றும் அவசியம் போன்றவற்றினை ஆய்வுசெய்து, அரசின்வசம் போதுமான நிலம் இருக்கும் பட்சத்தில், நிலஉரிமை மாற்றம் செய்யப்படுகிறது. அரசு நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டால் இதன் சந்தை நிலமதிப்பில் ஒரு மடங்கு மட்டுமே நிலக் கிரையமாக வசூல் செய்யப்படும். வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு நிலக் கிரையமாக வசூல் செய்யப்படும். நில உரிமை மாற்றம் செய்யப்படும் இனங்கள் தொடர்பாக விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால், நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை இழப்பீட்டுத் தொகை ஏதுமின்றி மீளப் பெறப்படும்.

பொது நலன் கருதி, குடிநீர் திட்டப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் போன்றவற்றிற்காக, உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் போன்றவற்றிற்கு அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அதேபோல், தமிழ்நாடு

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கும், அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

நில மாற்றம் மற்றும் நில உரிமை
மாற்றம் செய்யப்படவுள்ள புலமானது, பிற துறைகள்/
உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள
நிலங்கள்/ ஒப்புவிக்கப்பட்ட நிலங்களாக இருக்கும்பட்சத்தில், அம்முன்மொழிவுகளின்மீது விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக, பொதுப்பணித் துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைத் தலைவர்களின் இசைவு பெரும்பாலான இனங்களில் தேவைப்படுவதால், அத்துறைத் தலைவர்களை உள்ளடக்கியும், வருவாய்த் துறை செயலரைத் தலைவராகவும், நில நிர்வாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர்/ உறுப்பினர் செயலராகவும் கொண்ட தலைமைச் செயலக அளவிலான குழு,
அரசாணை (நிலை) எண்.426, வருவாய்த்[நி.மு.4]துறை,
நாள் **29.9.2014**–இன்படி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது

## 3.8 நில குத்தகை

வருவாய் நிலை ஆணை எண் **24**ஏ–இன் கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள்/ கட்டடங்கள்/ நிலத்துடன் கூடிய

கட்டடங்கள் போன்றவை, வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்கு, உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு தற்காலிகமாக

குத்தகை அடிப்படையில் கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

- ❖ நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

- ❖ குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை உள்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடக்கூடாது.

- ❖ குத்தகை நிபந்தனை மீறப்படின், குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம், எவ்வித இழப்பீடுமின்றி அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுவாக குத்தகை இனங்கள் குறைந்த பட்சம்

3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் தற்காலிக அடிப்படையில் வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், பொது நோக்கங்களின் அடிப்படையில் தேவை

எனக் கருதும்பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை வழங்கப்படுகிறது.

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி, ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் குத்தகை கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகைத் தொகை வசூல் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், நிலத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில், எவ்வித நிதி வரம்புமின்றி, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரால் குத்தகை தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

குத்தகை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் இனங்களில் நில மதிப்பின்படி, வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு, அரசாணை (நிலை) எண்.527, வருவாய்த்[நி.மு.2(1)]துறை, நாள் 28.11.2014–இன்படி கீழ்க்கண்டவாறு திருத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**குத்தகை வழங்குவதற்கான நிதி அதிகார வரம்பு**

| அலுவலர்கள் | நிதி அதிகார வரம்பு |
|---|---|
| வட்டாட்சியர் | ஏதுமில்லை |
| வருவாய் கோட்டாட்சியர் | ரூ.50,000/– |
| மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– |
| நில நிர்வாக ஆணையர் | ரூ.5,00,000/– |
| அரசு | ரூ.5,00,000/–க்கு மேல் |

குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் முதன்மை குத்தகைப் பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, வட்ட அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாயம் (Jamabandhi) முடிவுற்றபின்பு, வருவாய்த் தீர்வாய அலுவலரால் (Jamabandhi Officer) இப்பதிவேட்டில் உள்ள பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன (Updated). குத்தகைக்கு வழங்கப்பட்ட புலங்களில், குத்தகை நிபந்தனைகள் சரிவர கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை வட்டாட்சியர்/ வருவாய்க் கோட்டாட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அவ்வப்போது புலத் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

## 3.9 உப்பள நிலங்களை குத்தகைக்கு வழங்குதல்

உப்பு உற்பத்தி செய்வதற்கு, வருவாய் நிலை ஆணை எண் 24அ–இன்படி, அரசு உப்பள நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் உப்பு உற்பத்திக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு குத்தகைத் தொகை மற்றும் உரிமத்தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | குத்தகைத் தொகை | ரூ.5/– வீதம் ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| 2 | உரிமத்தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/– வீதம் குறைந்தபட்சமாக ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு ரூ.100/– |
| 3 | தலவரி 100% | ரூ.5/– ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| 4 | தலமேல் வரி 500 % | ரூ.25/– ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |
| | மொத்தம் | ரூ.135/– ஒரு ஏக்கருக்கு/ ஒரு வருடத்திற்கு |

தமிழகக் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 27,777 ஏக்கர் அரசு உப்பள நிலங்கள், குத்தகை அடிப்படையில் தனிநபர் மற்றும் பிற நிறுவனங்களுக்கு, உப்பு மற்றும் அதன் தொடர்புடைய பொருட்கள் உற்பத்தி செய்ய வழங்கப்பட்டுள்ளன.

சிறு உப்பு உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், உப்பு தயாரித்தல் பணியை ஊக்குவிக்கும் வகையிலும், இதர மாநிலங்களை ஒப்பிட்டு நோக்குகையில், தமிழகத்தில் உப்பள நிலங்களுக்கு நியாயமான குறைந்தபட்ச குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

## 3.10 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

பொது நலனைக் காக்க, அரசு நிலங்களில் உள்ள அனுமதியற்ற ஆக்கிரமணங்கள் தடுக்கப்படல் வேண்டும். மேற்படி ஆக்கிரமணங்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அரசு நிலங்களைப் பாதுகாக்க வேண்டியது வருவாய்த் துறையின் பொறுப்பாகும். அவ்வாறு ஆரம்ப நிலையிலேயே ஆக்கிரமணங்களைத் தடுக்க இயலாத நேர்வுகளில், அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், சட்டத்திற்குப் புறம்பான அத்தகைய ஆக்கிரமணங்களை அகற்றவும் கீழ்க்காணும் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன:

1. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
3. தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007
4. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001

5. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994

6. தமிழ்நாடு பொதுக் கட்டடம் (அனுமதிக்கப்படாத ஆக்கிரமிப்பு) சட்டம், 1975

7. தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்து சட்டம், 1958

அரசாணை (நிலை) எண்.41, வருவாய்த்துறை, நாள் 20.1.1987–இல், நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில், மேற்கண்ட நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடை ஆணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண்.186, வருவாய்த்துறை, நாள் 29.4.2003–இல் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்.20186/2000–இல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதனை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப்

புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகள், பொதுப்பணித் துறை மற்றும் காவல் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்.540, வருவாய்[நி.மு.6(2)]துறை, நாள் 4.12.2014–இன்படி ஒவ்வொரு வட்டம்/ கோட்டம்/ மாவட்ட அளவில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் குறித்த மனுக்களை தீர்வு செய்ய, குறை தீர்க்கும் குழுக்கள் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்குமாறும், வரையறைக்குட்பட்ட கால வரம்புக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான இயக்கக் குழுவில் ஆய்வு செய்யுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## 3.11 நில எடுப்பு

பொது நோக்கத்திற்கான, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும்பொருட்டு, மத்திய, மாநிலத் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. இதுநாள் வரை மத்திய நில எடுப்புச் சட்டம், 1894

(சட்டம் 1/1894)–இன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு சமூகத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற தேவைகளுக்கு நிலம் வழங்கவும், தொழில் உட்கட்டமைப்பு மற்றும் நெடுஞ்சாலை வளர்ச்சிக்காகவும் பின்வரும் மூன்று சட்டங்களை நிறைவேற்றியுள்ளது:

1. 1978–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 31/ 1978)

2. 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/ 1999)

**3. 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/ 2002).**

ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த மத்திய நில எடுப்பு சட்டம், **1894–**ஐ இரத்து செய்துவிட்டு, புதிய நில எடுப்பு சட்டமான "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், **2013 (30/2013)**" (The Right to Fair Compensation Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)-ஐ இயற்றி உள்ளது**.** இச்சட்டம் **1.1.2014** முதல் நடைமுறைக்கு வந்துள்ளது**.** இந்த புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி புனர்வாழ்வு மற்றும் மீள் குடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் (Process) ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது**.**

ஏற்கனவே மத்திய நில எடுப்பு சட்டம், **1894–**இன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இனங்களில், இடைக்கால சரியீட்டுத் தொகை ஏற்கனவே இருந்த மத்திய நில எடுப்பு சட்டம், **1894–**இன் கீழ் நிர்ணயம் செய்து வழங்கிடவும், அதன்பின் புதிய

மத்திய நில எடுப்பு சட்டத்தின்கீழ் கூடுதல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்க அறிவுறுத்தி இதற்கான வழிமுறைகள் அரசாணை(நிலை)எண்.88, வருவாய்த் துறை, நாள் 21.2.2014–இல் வெளியிடப்பட்டுள்ளது. மூன்று மாநில நில எடுப்புச் சட்டங்களின்கீழ் நில எடுப்பு தொடரப்பட்ட இனங்களிலும், இதே போல் சரியீட்டுத் தொகை நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட மூன்று மாநிலச் சட்டங்களின் கீழ், நில எடுப்பு நடவடிக்கை தொடர்ந்திடும் வகையில், மாநில அரசு புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1/2015–னை நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின் கீழ், புதிய நில எடுப்பு சட்டத்தில், 4–ஆம் அட்டவணையில் உள்ள 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்கள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மேற்கண்ட மூன்று மாநிலச் சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையில், பிரிவு 105–ஏ சேர்க்கப்பட்டு, அதன் கீழ் புதிதாக

ஏற்படுத்தப்பட்டுள்ள 5–ஆம் அட்டவணையில் இம்மாநிலச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இத்திருத்த மசோதாவுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் 1.1.2015 அன்று பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மத்திய சட்டம் 30/2013–இல் அட்டவணை 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள சரியீடு நிர்ணயம் செய்தல் மற்றும் அட்டவணை 2 மற்றும் 3–இல் குறிப்பிடப்பட்டுள்ள மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு தொடர்பான பிரிவுகள் தமிழ்நாடு அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்படி, 1.1.2014 மற்றும் அதன்பிறகு நில எடுப்பு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்ட இனங்களுக்கும் பொருந்தும் என முடிவெடுக்கப்பட்டு, அதன்படி சம்பந்தப்பட்ட நிர்வாகத் தலைமைத் துறையால் செயலாண்மை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.12 சிறுபாசனக் கணக்கெடுப்பு புள்ளி விவர பகுத்தாய்வு விவரம் (ஆர்.எம்.ஐ.எஸ்.)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடன், சிறுபாசனப்

பிரிவின் விரிவான தகவல்களை ஒருங்கிணைக்க, புள்ளி விவர சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பின் ஒருங்கிணைப்புத் தலைவராக நில நிர்வாக ஆணையர் செயல்படுகிறார்.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது:

1. ஒவ்வொரு ஐந்தாண்டும் சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களும் கணக்கெடுக்கப்படுகின்றன.

2. சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினை பகுத்தாய்வு செய்து காலாண்டு மற்றும் ஆண்டறிக்கை தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்பப்படுகின்றன.

### 3.12.1 ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு

5–வது சிறுபாசனக் கணக்கெடுப்பு, 2013–14–ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு, ஜுலை, 2014

முதல் தொடங்கப்பட்டு, அதன் தொடர்பான களப்பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. கணினி பதிவிற்கான வலைதள மென்பொருள், மத்திய அரசின் நீர்வளத்துறையிடமிருந்து பிப்ரவரி 2016 மாதம் பெறப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் கணினிப் பதிவுகள் முடியும் தருவாயிலுள்ளன.

5–வது சிறுபாசனக் கணக்கெடுப்புப் பணிக்காக இதுவரையில் ரூபாய் ஒரு கோடியே 45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 4. நிலச்சீர்திருத்தம்

நிலச்சீர்திருத்தம், நில நிர்வாகம் மற்றும் வருவாய் நிர்வாகம் ஆகிய துறைகள் வருவாய்த் துறையின் கீழ் 1.12.1980 முதல் வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்டன. நிலச்சீர்திருத்தத் துறை, வேளாண் நிலம் (ஊரகம்) சம்பந்தமான சட்டம் மற்றும் விதிகளை செயல்படுத்துகிறது. அதாவது நிலச்சீர்திருத்தம், குத்தகைச் சட்டங்கள், பூமிதானம் ஆகியவைகளை செயல்படுத்துவதுடன் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்காக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் எனும் சமூக பாதுகாப்பு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. நிலச்சீர்திருத்த ஆணையர் துறைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச்சீர்திருத்த இயக்குநர், இணை இயக்குநர், இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் உள்ளனர்.


2014–15–ஆம் ஆண்டில், பொதுமக்கள் தங்களது தேவைகளை விரைவாகவும் எளிதாகவும் அந்தந்த மாவட்டங்களிலேயே பெறும் வகையில் நிலச்சீர்திருத்தத்துறை மறுசீரமைக்கப்படும் என்று அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி மாநிலத்தில் செயல்பட்டு வந்த 6 நிலச்சீர்திருத்த

உதவி ஆணையர் அலுவலகங்களுக்குப் பதிலாக 31 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் (சென்னை நீங்கலாக) ஒரு நிலச்சீர்திருத்தப் பிரிவு உருவாக்கப்பட்டு நிலச்சீர்திருத்தச் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள அதிகாரங்கள் சார்ஆட்சியர்/ வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் பணி முன்னேற்றம் நிர்வாக ரீதியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் நிலச்சீர்திருத்த பிரிவு பணியாளர்களின் உதவியோடு மாவட்ட ஆட்சியரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு குத்தகைச் சட்டங்களை செயல்படுத்துவதற்கு துணை ஆட்சியர்களின் கீழ் 10 வருவாய் நீதிமன்றங்கள், முதன்மை செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையரின் கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றன. மேலும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் பூமிதானம் ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கீழ் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4.1 கட்டமைப்பு

நிலச்சீர்திருத்த துறையின் கட்டமைப்பு கீழ்க்கண்டவாறு:




நிலச்சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு:

## அட்டவணை 4.1

### நிலச்சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்

| வ. எண் | பணியிடங்கள் வகை | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதன்மைச் செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையர் | 1 |
| 2 | நிலச்சீர்திருத்த இயக்குநர் | 1 |
| 3 | இணை இயக்குநர் | 1 |
| 4 | நிதிஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் | 1 |
| 5 | உதவி ஆணையர்கள்/ தனித்துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட | 12 |
| 6 | கண்காணிப்பாளர்கள்/ துணை வட்டாட்சியர்கள் | 21 |
| 7 | உதவியாளர், உதவியாளர் நிலை வருவாய் ஆய்வாளர்கள் | 44 |
| 8 | சுருக்கெழுத்து தட்டச்சர் / தட்டச்சர் | 35 |
| 9 | இளநிலை உதவியாளர் | 21 |
| 10 | இதர பணியிடங்கள் | 76 |
| | **மொத்தம்** | **213** |

மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிலச்சீர்திருத்த பிரிவில் உள்ள ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் ஒரே சீராக இயங்கும் வகையில் வருவாய் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு செயல்படுகிறது.

## 4.2 நில உச்சவரம்பு கொள்கை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நில உடைமைகள் ஒரு முக்கிய ஆதாரம் என்பதால், விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை கையகப்படுத்தி அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்குதல் அவசியமாகின்றது.

எனவே, நில உடைமைகள் ஒருசிலரிடம் குவிந்து கிடப்பதை பரவலாக்குவதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 39–இன் உட்பிரிவு (b) மற்றும் (c)–இன்படி தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 58/1961) இயற்றப்பட்டது.

### 4.2.1 நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு நில உச்சவரம்பு 15.2.1970 முதல் நடைமுறையில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

## அட்டவணை 4.2

## நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு

| வ. எண் | விவரம் | அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு |
|---|---|---|
| 1 | **குடும்பம்**<br>i) ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் அறக்கட்டளை மற்றும் நிறுவனம் உட்பட) | 15 தர ஏக்கர் |
| | ii) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| | **அதிகபட்ச உச்சவரம்பு** | 30 தர ஏக்கர் |
| | iii) இதனைத் தவிர சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியில் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினரும் தங்களது பெயரில் உள்ள நிலங்களில் சீதன நிலமாக 10 தர ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். | |
| 2 | **பொது அறக்கட்டளைகள் (Public Trusts)** | |
| | i) 1.3.1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) | 5 தர ஏக்கர் |
| | ii) 1.3.1972 தேதிக்குப் பிறகு எந்த ஒரு பொது அறக்கட்டளையும் நிலங்களை வாங்க வழிவகை இல்லை. திருத்தச் சட்டம் 29/87ன்படி நிலங்களை வைத்துக்கொள்ள அரசின் அனுமதி வேண்டும். | |
| | iii) 1.3.1972 தேதிக்குமுன் இருந்த மத சார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious Nature) நில உச்சவரம்பு சட்டத்திற்குள் வராது. | |

**தர ஏக்கர்**

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு **3(40)**–இன்படி தர ஏக்கர் என்பது சம்பந்தப்பட்ட நிலத்தின் தீர்வையினை (Assessment) அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது.

### அட்டவணை 4.3

### சாதாரண ஏக்கரிலிருந்து தர ஏக்கராக கணக்கிடும் அட்டவணை

### புன்செய் நிலத்திற்கு

| **தீர்வை (Assessment) ஏக்கருக்கு** | **சாதாரண ஏக்கர்** | **தர ஏக்கர்** |
|---|---|---|
| ரூ.1.25–க்கு கீழ் | 4 | 1 |
| ரூ.1.25–2.00 | 3 | 1 |
| ரூ.2.00–க்கு மேல் | 2.5 | 1 |

### நன்செய் நிலத்திற்கு

| **தீர்வை (Assessment) ஏக்கருக்கு** | **சாதாரண ஏக்கர்** | **தர ஏக்கர்** |
|---|---|---|
| ரூ.4.00–க்கு கீழ் | 2 | 1 |
| ரூ.4.00–6.00 | 1.75 | 1 |
| ரூ.6.00–8.00 | 1.60 | 1 |
| ரூ.8.00–10.00 | 1.20 | 1 |
| ரூ.10.00–15.00 | 1 | 1 |
| ரூ.15.00–க்கு மேல் | 0.80 | 1 |

### 4.2.2 தொழில்/ வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 3(34)–இன்படி நிறுவனம் என்பது, "தனி நபர்" என்ற பொருள் வரையறைக்குட்பட்டது. இதனால் நிறுவனங்கள் 15.000 தர ஏக்கர் நிலங்கள் வரை வைத்துக் கொள்ளலாம். தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு 37–A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. திருத்தப்பட்ட சட்டம் 23/2010 மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### 4.2.3 பொது அறக்கட்டளைக்கு அனுமதி

பொது அறக்கட்டளைகள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு 37–B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி, திருத்தப்பட்ட சட்டம் 23/2010 மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது பொது அறக்கட்டளை நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## 4.3 வருவாய் நீதிமன்றங்கள்

நில உடமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை குத்தகைச் சட்டங்கள் கீழ் முடிவு செய்வதற்காக தற்போது மாநிலத்தில் 1. கடலூர், 2. மயிலாடுதுறை, 3. திருவாரூர், 4. தஞ்சாவூர், 5. மன்னார்குடி, 6. திருச்சிராப்பள்ளி, 7. லால்குடி, 8. நாகப்பட்டினம், 9. மதுரை மற்றும் 10. திருநெல்வேலி ஆகிய பத்து இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 4 வருவாய் நீதிமன்றங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக 2013–இல் தொடங்கப்பட்டவை ஆகும். இந்த 10 வருவாய் நீதிமன்றங்கள், 5 குத்தகை சட்டங்களை செயல்படுத்துகின்றன.

### 4.3.1 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

வருவாய் நீதிமன்றங்கள் அனைத்திலும் 9,806 வழக்குகள் 31.5.2011 அன்று நிலுவையில் இருந்தன. 1.6.2011 முதல் 30.6.2016 முடிய உள்ள காலத்தில் 30,670 வழக்குகள் வரப்பெற்று, 33,424 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 30.6.2016 அன்று 7,052 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

### 4.3.2 குத்தகை சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955** (தமிழ்நாடு சட்டம் 25/55)

நிலஉடமையாளருக்கு குத்தகைத் தொகைக் கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப் படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் 1.6.2011 அன்று 1,590 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 1.6.2011 முதல் 30.6.2016 முடிய 1,465 வழக்குகள் வரப்பெற்றது. 30.6.2016 வரை 2,529 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30.6.2016 அன்று 526 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

II) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956** (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நிலஉரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். பயிரிடும் குத்தகைதாரர்கள் பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நில உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் பொறுப்பாவார்கள்.

இச்சட்டத்தின் கீழ் 1.6.2011 அன்று 289 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 1.6.2011 முதல் 30.6.2016 முடிய 602 வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் 755 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு 30.6.2016 அன்று 136 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

III) **தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிர்வாக மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)**

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்)

சட்டத்தின்படி, பொது அறக்கட்டளைகளின் நிர்வாகத்தினை வரைமுறைபடுத்தி வேளாண் நிலங்களை சொந்த சாகுபடி செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவும் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு, அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளலாம், அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் **1.6.2011** அன்று **7,630** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **1.6.2011** முதல் **30.6.2016** முடிய **27,718** வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் **29,110** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **30.6.2016** அன்று **6,238** வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

IV) **தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இச்சட்டத்தின் கீழ், வட்டாட்சியர் குத்தகை உரிமையினை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார். இதுவரை **2,59,615** நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின் கீழ் **1.6.2011** அன்று **198** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **30.6.2016** முடிய **325** வழக்குகள் வரப்பெற்று மேற்படி காலத்தில் **388** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **30.6.2016** அன்று **135** வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

V) **தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு**

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, **1.4.1990** தேதியில் அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் **1.6.2011** முதல் **30.6.2016** வரை **642** வழக்குகள் முடிவு செய்யப்பட்டு **30.6.2016** அன்று **17** வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

## 4.3.3 தனித் துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) அதிகார எல்லைகள்

### அட்டவணை 4.4

### வருவாய் நீதிமன்ற ஆளுகைக்குட்பட்ட எல்லைகள்

| வ.எண் | வருவாய் நீதிமன்றம் | ஆளுகைக்குட்பட்ட எல்லை |
|---|---|---|
| 1 | கடலூர் | கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும். |
| 2 | திருச்சிராப்பள்ளி | பெரம்பலூர், அரியலூர், சேலம், கரூர், புதுக்கோட்டை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி கிழக்கு மற்றும் மேற்கு, மணப்பாறை, மருங்காபுரி மற்றும் திருவரம்பூர் வட்டங்கள். |
| 3 | லால்குடி | திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில், லால்குடி, முசிறி, மண்ணச்சநல்லூர், துறையூர், தொட்டியம் மற்றும் ஸ்ரீரங்கம் வட்டங்கள் |
| 4 | மதுரை | மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள் முழுவதும். |
| 5 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள் முழுவதும். |
| 6 | திருவாரூர் | திருவாரூர் வருவாய் மாவட்டத்தில் திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நன்னிலம் மற்றும் நீடாமங்கலம் வட்டங்கள் |
| 7 | மன்னார்குடி | திருவாரூர் வருவாய் மாவட்டத்தில், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டங்கள் |
| 8 | மயிலாடுதுறை | நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் குத்தாலம் வட்டங்கள் |
| 9 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில், நாகப்பட்டினம் கீழ்வேளூர், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் வட்டங்கள் |
| 10 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் முழுவதும். |

## 4.4 நியாய ஊதியங்கள்

### தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம்

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஏனைய இதர மாவட்டங்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது. இச்சட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4.5. பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்டது. ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் 13.3.1956 முதல் 18.4.1957 வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து பூமிதான இயக்கத்திற்கு நிலங்களை தானமாகப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடைமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்க ‘‘தமிழ்நாடு பூமிதான யக்ஞச்

சட்டம் **1958**" (Tamil Nadu Bhoodan Yagna Act 1958) இயற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து விதிகளும் இயற்றப்பட்டது. பூமிதான நிலங்களை பூமிதான வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாரியம் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.

பூமிதான வாரியத்திற்கு **28,050** ஏக்கர் நிலங்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இவைகளில், **20,494** ஏக்கர் நிலங்கள் நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலங்களில், **7,271** ஏக்கர், வழக்கு, பத்திரப்பதிவு, உறுதியாக்கம் முதலானவைகளின் கீழ் உள்ளன.

**2012–13**–ஆம் ஆண்டு முதல் பூமிதானம் தொடர்பான பணிகளில் மாவட்ட நிர்வாகம் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு தலைமையிடத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருவதால் நிலுவைப்பணிகளிலும், பூமிதான பணிகளை தொடர்வதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பூமிதான நிலங்களின் முறைகேடான விற்பனையை தடுக்கும் பொருட்டு பதிவுத்துறை புள்ளி விபரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு சுமார் **20,596** ஏக்கர் பூமிதான நிலங்களின் வழிகாட்டி மதிப்பு '**0**' (பூஜ்யம்) ஆக மாற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழ்நாட்டில்தான் முதல்முறையாக பூமிதான நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.6 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011

அரசாணை (நிலை) எண்.265, வருவாய்த்[நி.சீ.1(2)] துறை, நாள் **10.9.2011**–இன்படி 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்' **10.9.2011** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.6.1 தகுதிகள்

**விவசாய உறுப்பினர்கள்**

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள **18** வயது முதல் **65** வயது வரை உள்ள தொழிலாளர்கள், **2.50** ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது **5.00** ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் **18** வயது முதல் **65** வயது வரை உள்ள அனைத்து குறு/சிறு விவசாயிகள், பயிரிடு குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவார்கள். விவசாயத் தொழில் என்பது,

விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பால்பண்ணை தொழில், தீவன பயிர் செய்தல், மேய்ச்சல், நாற்று வளர்த்தல், கோழிப்பண்ணை, மரங்கள் வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன்பிடித்தல் ஆகும்.

**சார்ந்து வாழும் உறுப்பினர்கள்**

உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியானவர்கள். அவர்கள் உறுப்பினரின்,

(i) மனைவி அல்லது கணவன் (நேர்விற்கேற்ப)

(ii) குழந்தைகள்

(iii) இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்

(iv) பெற்றோர்

**4.6.2 உறுப்பினர்களைக் கணக்கெடுத்தல்**

பயனாளிகள் இத்திட்டத்தின் பயன்களைத் தொடர்ந்து பெறும்பொருட்டு **72,40,387** குடும்ப அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் முழுமையான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு அவைகள் வருவாய் கிராம அளவில் கணக்கெடுப்பு பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு

வருகிறது. மேலும், கணினியிலும் விவரங்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்:

**அட்டவணை 4.5**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011 கீழ் உறுப்பினர் கணக்கெடுப்பு விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | விவசாய உறுப்பினர்கள் | 1,59,58,265 |
| 2 | சார்ந்து வாழும் உறுப்பினர்கள் | 1,17,49,934 |
| | மொத்தம் | **2,77,08,199** |

இத்திட்டத்தின் கீழ் திருமணம், புதிய விவசாய உறுப்பினர்/ சார்ந்த உறுப்பினர், இறப்பு போன்ற காரணங்களுக்காக உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் நீக்குதல் தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

### 4.6.3 நிதி உதவி

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நல உதவிகள் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**உறுப்பினர்களுக்காக,**

(1) திருமண உதவித்தொகை

(2) முதியோர் ஓய்வூதியம்

(3) உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி

(4) விபத்து நிவாரணம்

(5) இயற்கை மரண உதவித்தொகை

(6) ஈமச் சடங்கு செலவு

**சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக,**

(1) கல்வி உதவித்தொகை

(2) திருமண உதவித்தொகை

(3) எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித்தொகை

(4) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவர்களுக்கான உதவித் தொகையினை சார்ந்து வாழும் உறுப்பினர்கள் தொடர்ந்து பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து உதவித் தொகைகளும் தனி வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக மாவட்ட

ஆட்சியர்களின் மேற்பார்வையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழான உதவித்தொகையின் சிறப்பு அம்சங்கள்:

**அ) உறுப்பினர்களுக்காக**

1) திருமண உதவி

விவசாய உறுப்பினரின் திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ.8,000/–மும் பெண்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மட்டுமே ஆண்களுக்கு திருமண உதவி வழங்கப்படுகிறது. முந்தைய தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 திட்டத்தில் ஆண்களுக்கு ரூ.3,000/–மும் பெண்களுக்கு ரூ.5,000/–மும் வழங்கப்பட்டது. 10.9.2011 முதல் 30.6.2016 வரை 25,064 பயனாளிகளுக்கு ரூ.21.11 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2) முதியோர் ஓய்வூதியம்

தகுதியுள்ள விவசாய உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ.1000/– வருவாய் நிருவாகத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

### 3) உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை

உறுப்பினர்கள் நோய்களால்/ கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காலங்களில் உறுப்பினர்கள் விவசாய தொழிலுக்கு செல்ல இயலாது. இந்த தற்காலிக உடல் திறனற்ற காலத்தில் வருமானம் இல்லாமல் உறுப்பினரின் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகும். எனவே, மேற்படி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், விவசாய உறுப்பினர்கள், காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி/ எய்ட்ஸ், இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis), கை, கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, நரம்பு சம்பந்தமான நோய், முதுகு தண்டுவடம் பாதிப்பு, இதய நோய், பார்வை இழத்தல், கல்லீரல் நோய், சிறுநீரக நோய், மனநிலைபாதிப்பு, அரிவாள் செல் ரத்த சோகை, ரத்த அளிவு சோகை, ரத்த உறையா நோய் போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/– வழங்கப்படுகிறது. இந்த புதிய திட்டம் 2012–13–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் விரிவாக்கப்படுகிறது. 2012–13 முதல் 30.6.2016 வரை 1,20,248 பயனாளிகளுக்கு ரூ.65.19 கோடி வழங்கப்பட்டுள்ளது.

4) விபத்து நிவாரணம்

உறுப்பினர் விபத்தில் உயிரிழந்தால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு நிதிஉதவி மூலம் துயர்துடைக்கும் வகையில், ரூ.1,00,000/– வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு பேருதவியாக உள்ளது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படுகின்றன

**அட்டவணை 4.6**

**விபத்து காயங்களுக்கு உதவி**

| வ.எண் | காயங்களின் விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | இரண்டு கை அல்லது இரண்டு கால் இழத்தல் | 1,00,000 |
| 2 | ஒரு கை மற்றும் ஒரு கால் இழத்தல் | |
| 3 | இரண்டு கண்களிலும் பார்வை முழுவதுமாக இழத்தல் | |
| 4 | ஒரு கை அல்லது ஒரு கால் இழத்தல் | 50,000 |
| 5 | பக்கவாதம் | 50,000 |
| 6 | மேலே குறிப்பிட்டுள்ளவை அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக உறுப்புகளை இழத்தல் | 20,000 |

10.9.2011 முதல் 30.6.2016 வரை 17,149 பயனாளிகளுக்கு ரூ.167.95 கோடி விபத்து நிவாரணமாக (ஈமச்சடங்கு செலவு ரூ.2,500/– உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

5) இயற்கை மரணத்திற்கான உதவி

விவசாய உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால், இறந்த விவசாய உறுப்பினரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ.10,000/– வழங்கப்படுகிறது. 10.9.2011 முதல் 30.6.2016 வரை 2,56,985 பயனாளிகளுக்கு ஈமச்சடங்கு செலவு உட்பட ரூ. 318.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

6) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினர் இறந்து விட்டால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/– வழங்கப்படுகிறது.

**ஆ) சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக**

சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கு உதவிகள் கீழ்க்கண்டவாறு:

1) கல்வி உதவி

உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வியினை தொடரும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

## அட்டவணை 4.7
## கல்வி உதவி

| வ. எண் | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் (ரூ) | பெண் (ரூ) | ஆண் (ரூ) | பெண் (ரூ) |
| 1 | தொழிற் பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2 | கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 3 | இளங்கலைப் பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 4 | முதுநிலைப் பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு. (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |
| 5 | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6 | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

இந்த உதவித்தொகை ஆண்டுதோறும் படிப்பினை முடிக்கும் வரை வழங்கப்படுகிறது. படிப்பு இடைநிறுத்தப்பட்டால் இவ்வுதவித் தொகையும் நிறுத்தப்படும். கல்வி உதவித் தொகையினை பொறுத்தவரை, பயனாளிகள் வேறு எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவி பெற்றிருந்தாலும், இத்திட்டத்தின் கீழும் கல்வி உதவித்தொகையினை பெறலாம். 10.9.2011 முதல் 30.6.2016 வரை 12,09,530 மாணவ, மாணவிகளுக்கு ரூ.286.73 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2) திருமண உதவி

விவசாய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை வழங்குவது போல், விவசாய உறுப்பினர்களைச் சார்ந்துள்ள குழந்தைகளின் திருமணத்திற்காக ஆண்களுக்கு ரூ.8,000/–மும் பெண்களுக்கு ரூ.10,000/–மும் வழங்கப்படுகிறது. 10.9.2011 முதல் 30.6.2016 வரை 2,52,638 பயனாளிகளுக்கு ரூ.221.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

3) எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவித் தொகை

விவசாய உறுப்பினர் எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த பிறகு, சில இனங்களில் அவர்களின் குழந்தைகளும் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது ஆதரவற்றவர்களாகி

விடுகின்றனர். இந்த மாதிரியான குழந்தைகளுக்கு தங்களின் படிப்பினை தொடர இயலாமலும் அல்லது அவர்களின் அடிப்படை தேவைகளை சமாளிக்க முடியாமலும் ஆகிறது. எனவே,

2013–14 முதல் இவர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ.1000/– வழங்கப்படுகிறது. எச்.ஐ.வி/ எயிட்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழ்நாடு டிரஸ்டுக்காக, தமிழ்நாடு எயிட்ஸ் கட்டுப்பாடு சங்கம் (Tamil Nadu AIDS Control Society) தயாரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் படி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட குழு (District Committee) பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த உதவி எச்.ஐ.வி/ எயிட்ஸ்–ஆல் பெற்றோரை (ஒருவர்/ இருவரையும்) இழந்த 0–18 வயது வரை உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

2013–14 முதல் 30.6.2016 வரை 3,555 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.2.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

4) ஈமச்சடங்கு செலவு

விவசாய உறுப்பினர்களுக்கு வழங்குவதுபோல், சார்ந்த உறுப்பினர்கள் இறந்தாலும், ஈமச்சடங்கு செலவு தொகையாக ரூ.2,500/– இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

### 4.6.4 செயலாக்கம் (Performance)

2016–17 ஆம் ஆண்டில், (30.6.2016 முடிய) 1,53,143 பயனாளிகளுக்கு ரூ.101.61 கோடி (முதியோர் ஒய்வூதியம் நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 4.8**

**2016–17–இல் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உதவிகள் விவரம் (30.6.2016)**

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கல்வி உதவி | 19.60 | 79,099 |
| 2 | உறுப்பினர்களின் திருமணம் | 2.78 | 3,240 |
| 3 | உறுப்பினர்களின் குழந்தைகள் திருமணம் | 19.95 | 23,073 |
| 4 | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 31.64 | 25,971 |
| 5 | விபத்து நிவாரணம் | 19.66 | 1,948 |
| 6 | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 7.71 | 19,197 |
| 7 | எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மானிய உதவி | 0.27 | 615 |
| | **மொத்தம்** | **101.61** | **1,53,143** |

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் **2011–இன்** கீழ் **10.9.2011** முதல் **30.6.2016** வரை வருடாந்திர செலவு மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 4.9

## முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செலவு மற்றும் பயனாளிகள் விவரம்

| விவரம் | 2011–12 (10.9.2011 முதல் 31.3.2012 வரை) | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 (30.6.16 வரை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| செலவு (ரூபாய் கோடியில்) | 117.69 | 216.42 | 224.59 | 214.91 | 207.12 | 101.61 | 1082.34 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 164422 | 399573 | 404462 | 379999 | 383570 | 153143 | 1885169 |

## 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறை, வருவாய்த்துறையின் அங்கமாக செயல்பட்டு வருகிறது. அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடிய துறைகளில் இத்துறையும் ஒன்றாகும். இத்துறை, நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978–இன் கீழ் 15.6.1999 வரை கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற நிலங்கள் தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. மேலும் இத்துறை, நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச்சட்டம் 1991–இன் கீழ் 1.7.1981 நாளைய சந்தை மதிப்பின் அடிப்படையில்
24 மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### 5.1 பணியாளர் அமைப்பு

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறையின் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் இத்துறையின் தலைவர் ஆவார். ஆணையரகத்தின் உதவி ஆணையர் (தலைமையிடம்) அவருக்கு உதவி புரிகிறார். மைலாப்பூர், தண்டையார்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர்,

திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஏழு நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்கள் உள்ளனர். இவர்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகராட்சிகளில் நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978–இன்படி கையகப்படுத்தப்பட்ட நகர்ப்புற மிகைவெற்று நிலங்கள் தொடர்பான பணியினையும் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலவரி தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## 5.2 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

ஒரு சில தனிநபர்களின் கைப்பற்றில் விவசாயமல்லாத நிலங்கள் குவிந்து கிடப்பதை சமமாகப் பகிர்ந்தளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்குடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளில் உள்ள நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978—இன் படி 15.6.1999 வரையிலும் ஒவ்வொரு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் உள்ள தனி நபர், குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான உச்சவரம்பு விவரம் கீழ்வருமாறு:

**அட்டவணை— 5.1**

**தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இன்படி உச்சவரம்பு**

| வ. எண் | நகர்ப்புற கூட்டுப்பகுதி | தனிநபர் ச.மீ | குடும்பம் ச.மீ | தொழில் நிறுவனம் ச.மீ |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 500 | 2000 | 2000 |
| 2 | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி (ம) சேலம் | 1500 | 3000 | 3000 |
| 3 | திருநெல்வேலி | 2000 | 4000 | 4000 |

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 ஆனது தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)—இன் வாயிலாக 16.6.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே

கையகப்படுத்தப்பட்டு, நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த தேதியில் அரசு வசம் உள்ள நிலங்களுக்கு, இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978–இன் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

**அட்டவணை–5.2**

**தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 –இன்படி கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்**

| வ எண் | விவரம் | சதுர மீட்டரில் |
|---|---|---|
| 1 | கையகப்படுத்தப்பட்ட மொத்த பரப்பு | 1,89,79,446 |
| 2 | அரசுத்துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்த பரப்பு | 43,70,050 |
| 3 | நீதிமன்ற வழக்குகளில் உள்ள பரப்பு | 33,27,312 |
| 4 | அறியாமல் கிரயம் பெற்றவர்களின் கைப்பற்றில் உள்ள பரப்பு | 23,95,785 |
| 5 | ஆக்கிரமிப்பில் உள்ள பரப்பு (நில உரிமையாளர்கள் மற்றும் உரிமையற்ற ஏனையோர்) | 79,53,950 |
| 6 | ஆக்கிரமிப்பு இல்லாத நிலம் | 9,32,349 |

## 5.3 அறியாமல் கிரயம் பெற்றவர்களின் நிலங்களை வரன்முறை செய்தல்

கையகப்படுத்தப்பட்ட அரசு மிகை வெற்று நிலங்களை, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது 1½ மனை வரை குடியிருப்பு நோக்கத்திற்காக வாங்கியிருப்பின், அதனை அரசு நிர்ணயித்துள்ள நிலமதிப்பினை செலுத்தி வரன்முறை செய்து கொள்ள அரசாணை (நிலை) எண்.**649**, வருவாய்த்துறை, நாள் **29.7.1998**–இன்படி அனுமதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1½ மனைக்கு மேல் கிரயம் பெற்ற நிலங்களையும், குடியிருப்பு நோக்கம் அல்லாது மற்ற இதர பயன்பாடுகளுக்கும் கிரயம் பெற்றிருப்பின் இரு மடங்கு/ மும்மடங்கு நிலமதிப்புத் தொகை செலுத்தி வரன்முறைப் படுத்திக் கொள்ள அரசாணை (நிலை) எண்.**565**, வருவாய்த்துறை, நாள் **26.9.2008**–இன்படி அனுமதிக்கப் பட்டது. மேற்படி உத்தரவின்படி நிலம் கையகப்படுத்தப்பட்டதை அறியாமல் கிரயம் பெற்றவர்களுக்கு அக்கிரயத்தினை வரன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 5.4 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 திருத்தச் சட்டம், 1991

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966, 1.7.1963–இல் விவசாயம் அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் ஒரு சில நில உடமையாளர் வசம் நகர்ப்புற நிலம் குவிந்து கிடப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் திருச்சி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், திருநெல்வேலி மாநகராட்சி பகுதி மற்றும் 23 நகராட்சிகளாகிய காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், நாமக்கல், மேட்டூர், ஈரோடு, திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தூத்துக்குடி, இராஜபாளையம், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் அமலாக்கப்பட்டது.

மேற்படி வட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 1.7.1981 ஆம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1.7.1991 முதல் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது.

## அட்டவணை – 5.3 நகர்ப்புற நில வரிவிதிப்பு விவரங்கள்

| வ. எண் | சென்னை மற்றும் ஏனைய நகர்ப்பகுதியில் உள்ள நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நகர்ப்புற நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 1 | 2 மனைகளுக்குள் | வரி இல்லை | 3 மனைகளுக்குள் | வரி இல்லை |
| 2 | 2 மனைகளுக்கு மேல் 5 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 3 மனைகளுக்கு மேல் 7 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | 5 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 7 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4 | 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | 20 மனைகளுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 20 மனைகளுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966, திருத்தச்சட்டம் 1991–இன்படி இச்சட்டம் அமலிலுள்ள 24 மாவட்டங்களில் சுமார் 2 இலட்சம் வரி விதிப்புதாரர்கள் உள்ளனர். பசலி 1425–இன்படி நகர்ப்புற நிலவரி நடப்புக்கேட்பாக ரூபாய் 19.40 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலவரிச்சட்டப் பிரிவு **29** இன் கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன.

(i) மத்திய மாநில அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிலங்கள்.

(ii) பொது வழிப்பாட்டுக்கான நிலங்கள்.

(iii) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை உபயோகத்திற்கான நிலங்கள்.

(iv) மயானபூமி நிலங்கள்.

(v) சாலைகளாகப் பயன்படும் நிலங்கள்.

(vi) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்.

(vii) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகம் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

(viii) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமையப்பெற்ற நிலங்கள்.

தர்ம, சமய மற்றும் லோபோகாரி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு இன்னல் இருப்பின், பிரிவு **27(1)**–இன் கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு அரசு வரிச்சலுகைகளை அளித்துள்ளது.

(அ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற் சாலைகளுக்கு வரியில் 25 விழுக்காடு, மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 விழுக்காடு.

(ஆ) அனைத்து சங்கீத நாடக சபைகளுக்கு 50 விழுக்காடு.

(இ) திரையரங்குகளுக்கு 10 விழுக்காடு.

(ஈ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு 100 விழுக்காடு மற்றும்

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டிடம் இருந்து, அது நிலத்தின் உரிமையாளரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 விழுக்காடு.

## 5.5 நகர்ப்புற நிலவரி சட்டத்தின் கீழ் மேல்முறையீடு/ சீராய்வு அதிகாரம்

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு உத்தரவுகளின்பேரில் அதிருப்தி ஏதேனும் இருப்பின், சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம், 1966, திருத்தச்சட்டம்

1991–இன் பிரிவு 20(1)–இன்கீழ் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யலாம். தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம், 1966, திருத்தச்சட்டம் 1991–இன் பிரிவு 30(1)–இன் கீழ் முதன்மைச் செயலர்/ நிலச் சீர்திருத்த ஆணையருக்கு சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஓர் அறிவிக்கையின் மூலம் நேரடியாக ஆஜராக வாய்ப்பு அளிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, முதன்மைச் செயலர்/ நிலச் சீர்திருத்த ஆணையரால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

## 6. நில அளவை மற்றும் நிலவரித்திட்டம்

150 ஆண்டுகளுக்கும் மேலான பெருமைக்குரிய பாரம்பரியத்தையுடைய இத்துறை, நிலஅளவைப் பணிகளில் சங்கிலி, நேர்க்கோணக்கட்டை மற்றும் கோணமாணி போன்ற பழைய கருவிகளுக்குப் பதிலாக, நவீன கருவிகளான நில இயல் நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி ஆகியவற்றையும், கையினால் தயாரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்த பழைய நில ஆவணங்களுக்கு பதிலாக கணினி மூலம் தயாரிக்கப்பட்ட நில ஆவணங்களையும், வட்ட அலுவலகங்களில் பழமை வாய்ந்த பட்டா மாறுதல் முறைகளுக்கு பதிலாக இணையவழி பட்டா மாறுதல் சேவைகளையும் பயன்படுத்தும் வகையில் இத்துறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலால் நவீனமயமாக ஆக்கப்பட்டுள்ளது.

2016–ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சரின் நல் ஆளுமைக்கான விருதும், ரூ.2.00 இலட்சம் ரொக்கப்பரிசும் இத்துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.8.2016–இல் நடைபெற்ற 70–வது இந்திய சுதந்திர தின விழாவில் வழங்கப்பட்டது. இவ்விருது அனைத்து நில ஆவணங்களையும் கணினிப்படுத்தி இணையவழி பட்டா மாறுதலை நடைமுறைப்படுத்தி, பொதுமக்களுக்கு

நிகழ்நிலைப்படுத்தப்பட்ட நில ஆவணங்களை இணையத்தில் எந்நேரத்திலும் எங்கிருந்தும் பார்க்கவும் தேவையானால் அ–பதிவேடு மற்றும் சிட்டா நகலை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டதற்காக வழங்கப்பட்டதாகும். இவ்விருது இத்துறைக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாக உள்ளது.

## 6.1 நிலஅளவை குறித்த வரலாறு

முறையான நடைமுறைகளுடன் கூடிய நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட பணிகள் தஞ்சையை ஆண்ட முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான கி.பி.985–1011–இல் தான் முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில், கி.பி.1802–இல் வில்லியம் லேம்ப்டன் என்பவரால், பெருமுக்கோண நிலஅளவைக்காக பரங்கிமலையிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள பெரும்பாக்கம் (சோழிங்கநல்லூர் அருகிலுள்ள பெரும்பாக்கம்) எனும் இடம்வரை அடிப்படைக்கோடு (base line) அமைத்து பணி துவங்கப்பட்டது. 'கிரேட் ஆர்க்' நிலஅளவை முறையில் கன்னியாகுமரி முதல் காசுமீரம் வரை நிலஅளவை மேற்கொள்ளப்பட்டபோது, சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த தமிழகத்தை ஆரம்பப் பகுதியாகக் கொண்டு நிலஅளவை

மேற்கொள்ளப்பட்டது. உலகப் புகழ்பெற்ற 'கிரேட் ஆர்க்' நிலஅளவை, பரங்கிமலை முதல் பெரும்பாக்கம் வரையான பகுதியின் அளவீட்டுடன் **10.4.1802–**இல் துவங்கப்பட்டு, அதே இடத்தில் **62** ஆண்டுகளுக்கு பின்னர் முடிவடைந்தது.

### 6.1.1 பல்வேறு வகையில் மேற்கொள்ளப்பட்ட நிலஅளவைப் பணிகள்


பல்வேறு வகை நில அளவை திட்டங்கள், வெவ்வேறு காலங்களில் இத்துறையால் செயல்படுத்தப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| **1.** துவக்க நிலஅளவை | : | **1826** |
| **2.** ரயத்துவாரி முதல் நிலஅளவை | : | **1858** |
| **3.** நகர நிலஅளவையில் உள்ள பிளாக் வரைபடங்கள் | : | **1891–1894** |
| **4.** மலைக்கிராம நிலஅளவை | : | **1883** |
| **5.** மறு நிலஅளவை | : | **1905 – 1926** |
| **6.** நிலஉடைமை மேம்பாட்டுத்திட்டம் | : | **1979 – 1987** |
| **7.** நத்தம் நிலஅளவை | : | **1989 – 1992** |
| **8.** துணை நகர நிலஅளவை | : | **1989 – 1997** |

## 6.2 துறையின் அமைப்பு நிலை

சென்னை, சேப்பாக்கத்திலுள்ள ‘‘நிலஅளவை இல்லத்தில்’’ நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககம் அமைந்துள்ளது. இவ்வியக்ககத்தில் நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் எனும் இரு பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் இவ்வியக்ககத்தின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மாநில அளவிலான நில அளவை வரைபடம் தயாரித்தலை செயல்படுத்தி வெளியிடும் மத்திய நில அளவை அலுவலகமும் இவ்வியக்ககத்தில்தான் அமைந்துள்ளது. நிலஅளவை பதிவேடுகள் துறையின் உதவி இயக்குநர்களின் தலைமையின் கீழ் செயல்படும் மாவட்ட நிலஅளவை அலுவலகங்கள், ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திலும் அமைந்துள்ளன. நிலஅளவைத்திட்டங்களை அடிப்படை நிலையிலிருந்து செயல்படுத்துவது இவற்றின் பொறுப்பாகும். ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் உள்ள நிலஅளவைப் பிரிவு, நில உரிமை மற்றும் நிலவகைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நில ஆவணங்களை பராமரிப்பதை பொறுப்பாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

## அமைப்பு விளக்கப் படம்



## 6.3 மாநில அரசின் திட்டங்கள்

### 6.3.1 நகர அளவை

கிராமங்கள் முன்னேற்றமடையும் போது பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன. அவை மேலும் வளரும்போது, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன. கிராம மற்றும் பேரூராட்சிகளில் மரபு சார்ந்த நடைமுறைகளான மூலைவிட்ட செங்குத்து முறை (Diagonal & Offset) போன்றவற்றை பின்பற்றி வருவாய் நில அளவை (Cadastral Survey) மேற்கொள்ளப்பட்டு, நிலம் சார்ந்த ஆவணங்கள், புலப்படச்சுவடி, `அ' பதிவேடு, சிட்டா, மற்றும் அடங்கல் ஆகிய வடிவங்களில் பராமரிக்கப்படுகின்றன.

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில், வார்டுகள், பிளாக்குகள், நகர அளவை எண்கள் வாரியாக நில அளவை மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில், வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகரஅளவை நிலப்பதிவேடு மற்றும் சிட்டா ஆகிய நில ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன. எனவே, பேரூராட்சிகள் அரசால் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்படும்போது, நகர நில அளவை முறையில் புதியதாக நில அளவை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## மாநகராட்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | மொத்த மாநகராட்சிகள் | 12 |
| 2 | மாநகராட்சியில் பழைய எல்லைகளின்படி நகர நிலஅளவை பணி முடிக்கப்பட்டது (மரபு சார்ந்த நிலஅளவை முறைகளின்படி) | 12 |
| 3 | மாநகராட்சிகளின் விரிவாக்கப் பகுதிகளில் நவீன நில அளவை முறைப்படி நகர நில அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 8 |
| 4 | நகர அளவைப் பணி துவங்கப்பட உள்ள மாநகராட்சிகள் (நவீன நிலஅளவை கருவிகள் மூலமாக) | 4 |

## நகராட்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | மொத்த நகராட்சிகள் | 152 |
| 2 | நகர அளவை முடிக்கப்பட்டது (மரபு சார்ந்த முறைகளின்படி) | 84 |
| 3 | நகர அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளவை (நவீன நில அளவை) | 12 |
| 4 | நகர அளவைப் பணி துவங்கப்பட உள்ள நகராட்சிகள் (நவீன நிலஅளவை கருவிகள்) | 56 |

### 6.3.2 நத்தம் மற்றும் மலைக்கிராம நில அளவை

கிராமத்தில் நத்தம் என்பது குடியிருப்பு பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்டு நத்தம் புறம்போக்காக வருவாய் ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளாகும். இத்தகைய நத்தம் புறம்போக்கு குடியிருப்புப் பகுதிகளில் வசிப்போருக்கு அவர்களது அனுபோகத்துக்கேற்றவாறு உட்பிரிவு ஆவணங்கள் ஏதும் வருவாய் ஆவணங்களில் இல்லாமல் இருந்தது. எனவே, இத்தகைய நத்தம் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு பட்டா வழங்குவதற்காக நடைபெற்ற நத்தம் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பணிகள், திருவள்ளூர் மாவட்டம்–அம்பத்தூர், நீலகிரி–பந்தலூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களில் நடைபெற்று வரும் நிலவரித்திட்ட பணிகளைத் தவிர மாநிலத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மலைக் கிராமங்களில் நில அளவை செய்வதற்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், சமவெளிப்பகுதிகளில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்தினின்றும் வேறுபட்டதாகும். மலைக் கிராம அளவைப்பணி 6 மாவட்டங்களில் உள்ளடங்கிய 67 மலைக் கிராமங்களில் நிறைவுபெற்றுள்ளது. 60 மலைக்கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி நிறைவுபெற்றுள்ளது. மீதமுள்ள 7 மலைக்கிராமங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 6.3.3 நவீன மறு நில அளவை

நவீன மறு நிலஅளவை முறையை அறிமுகப்படுத்துவதென்பது, மில்லிமீட்டர் அளவிற்கு துல்லியமான நில ஆவணங்களை உருவாக்குவதை உறுதி செய்வதுடன், நிலங்கள் மற்றும் அவற்றின் வகைப்பாடுகள் குறித்த விவரங்களடங்கிய இலக்கமுறை தரவுத்தளத்தை (Digital database) உருவாக்கிட வழிவகுக்கும். இது, மக்கள் தமது நிலங்களின் விவரங்களை அறிந்து கொள்வதற்கும் நிலங்களின் பயன்பாடுகளை எளிதாக திட்டமிடுவதற்கும் உதவிகரமாகவும் அமையும். மேலும் இலக்கமுறை தரவு தளத்தில் ஆவணங்களை பராமரிப்பதன் மூலம் முறைகேடான நிலப்பரிவர்த்தனைகள் தடுக்கப்படுவதுடன், இணையவழியில் அரசு நிலங்களை கண்காணித்து பாதுகாக்கவும் இயலும்.

**நவீன நிலஅளவை கருவிகளைக் கொண்டு நிலஅளவைப் பணி நடைபெறும் மாநகராட்சி மற்றும் அதன் விரிவாக்கப் பகுதிகளின் விவரம்:**

| வ.எண். | மாவட்டம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 | சென்னை | சென்னை |
| 2 | திருப்பூர் | திருப்பூர் |
| 3 | வேலூர் | சத்துவாச்சாரி |
| 4 | மதுரை | திருப்பரங்குன்றம் |
| 5 | கோயம்புத்தூர் | கவுண்டம்பாளையம் |
| 6 | ஈரோடு | பெரியசேமூர் |
| 7 | திருச்சி | துவாக்குடி |
| 8 | திருவள்ளூர் | வளசரவாக்கம் |

**நவீன நிலஅளவை கருவிகளைக் கொண்டு நிலஅளவைப் பணி நடைபெறும் நகராட்சிகளின் விவரம்:**

| வ.எண். | மாவட்டம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | பம்மல் |
| 2 | | அனகாபுத்தூர் |
| 3 | சேலம் | நரசிங்கபுரம் |
| 4 | தேனி | கூடலூர் |
| 5 | திருநெல்வேலி | அம்பாசமுத்திரம் |
| 6 | தூத்துக்குடி | காயல்பட்டினம் |
| 7 | விருதுநகர் | திருத்தங்கல் |
| 8 | இராமநாதபுரம் | கீழக்கரை |
| 9 | பெரம்பலூர் | பெரம்பலூர் நகரம் |
| 10 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் |
| 11 | விழுப்புரம் | கள்ளக்குறிச்சி |
| 12 | நாகப்பட்டினம் | வேதாரண்யம் |

சட்டமன்றத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு ஏற்ப நில இயல் நிலைக்கலன் (ஜி.பி.எஸ்) மற்றும் மின்னணு நில அளவைக் (ஈ.டி.எஸ்) கருவிகளைக் கொண்டு கீழ்காணும் மூன்று முன்மாதிரி வட்டங்களில் மறுநில அளவைப் பணி துவங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அகஸ்தீஸ்வரம் வட்டம் | – | கன்னியாகுமரி மாவட்டம் |
| 2. | ஊத்தங்கரை வட்டம் | – | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 3. | உதகமண்டலம் வட்டம் | – | நீலகிரி மாவட்டம் |

இந்த முன்னோடி ஆய்வு பணி வெற்றிகரமாக முடிவடைந்த பின்னர், மாநிலம் முழுவதும் உள்ள பிற மாவட்டங்களுக்கு மேற்குறிப்பிட்ட நவீன தொழில்நுட்ப மறுநிலஅளவைப் பணி விரிவாக்கம் செய்யப்படும்.

## 6.4 நிலஅளவைஆவணங்களை கணினிப்படுத்துதல்

### 6.4.1 கிராம மற்றும் நகர நில ஆவணங்களின் வகைகள்

**ஊரகப் பகுதிகளில்...**

(1) **'அ' பதிவேடு –** புல எண் வாரியான கிராம நில ஆவணங்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. இதில் மாவட்டம், வட்டம், கிராமம், புல எண், உட்பிரிவு எண், நில வகைப்பாடு, பாசன ஆதாரம், தரம், பரப்பளவு, தீர்வை, உரிமையாளர் பெயர் போன்ற விவரங்கள் அடங்கும்.

(2) **சிட்டா –** பட்டாதாரர் வாரியாக கிராம நில ஆவணங்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. பட்டாதாரர் வாரியாக அவர்தம் உடைமையிலுள்ள நிலப் பரப்பளவு பற்றிய விவரங்கள் மற்றும் நன்செய், புன்செய் நிலங்களுக்கான வருவாய்த்தீர்வை கணக்கீட்டு விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(3) **புலப்படப் புத்தகம் –** தனிப்புலம் அல்லது உட்பிரிவுகளை உள்ளடக்கிய வரைபடங்களைக் கொண்டது.

(4) **அடங்கல் –** விளைவிக்கப்படும் பயிர்வகை விவரங்களைக் கொண்டது.

(5) **கிராம வரைபடங்கள் –** கிராமங்களின் அனைத்து புல எண்களையும் உள்ளடக்கியது. கிராமங்களின் எல்லைப்புறங்களின் மாற்றம் ஏற்படும் போது மட்டுமே கிராம வரைபடங்கள் திருத்தம் செய்யப்படும்.

(6) **கோண அளவை** (Traverse records) ஆவணங்கள் மற்றும் அது தொடர்பான நிலஅளவை ஆவணங்கள்.

**நகரப் பகுதிகளில்...**

(i) **நகர நில அளவைப் பதிவேடு**– நகர நில அளவைப் புல எண் வாரியாக பழைய புல எண்களுடன் இயைந்த விவரங்கள் மற்றும் நில வகைப்பாடு, பரப்பளவு, கதவு எண், தெருப்பெயர்கள், நில உரிமைதாரர் பெயர் மற்றும் நிலப் பயன்பாடு போன்ற விவரங்களை உள்ளடக்கியது.

(ii) **பிளாக் வரைபடம்**– தெருப்பெயர்களுடன் கூடிய நகர நில அளவைப் புல எண்களின் கூட்டு வரைபடங்களைக் கொண்டது.

### 6.4.2 கணினிப்படுத்துதலில் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள்

மேலே விவரிக்கப்பட்டுள்ள பல்வகைப்பட்ட நிலஆவணங்களைக் கணினிப் படுத்துவதற்கென வெவ்வேறு மென்பொருட்கள் தேவைப்படுகின்றன. கிராம மற்றும் நகர நில ஆவணங்களின் கலங்களின் அமைப்பு வேறுபட்டவையென்பதால் மேற்படி ஆவணங்களைக் கணினிப்படுத்த பொதுவானதொரு மென்பொருளை உபயோகிக்க இயலாது. எனவே, தேசிய தகவல் மையம் மூலம் கீழ்க்காணும் மென்பொருட்களை வெவ்வேறு காலகட்டங்களில் இத்துறை உருவாக்கியுள்ளது.

(i) கிராமப்புற நில ஆவணங்களைக் கணினிப்படுத்துவதற்கென 'தமிழ்நிலம்' (தமிழ்நாடு நில நிர்வாகம் மற்றும் மேலாண் தகவல் அமைப்பு) மென்பொருள்.

(ii) புலப்படங்களைக் கணினிப்படுத்துவதற்கென 'கொலாப்லேண்ட்' மென்பொருள்.

(iii) கிராமப்புற நில ஆவணங்களை இணையவழியே பராமரிப்பதற்கென 'இணையம் சார்ந்த தமிழ்நிலம்' மென்பொருள்.

(iv) நகர்ப்புற நில ஆவணங்களை இணையவழியே பராமரிப்பதற்கென 'இணையம் சார்ந்த தமிழ்நிலம்' மென்பொருள்.

### 6.4.3 நகர்ப்புற நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்

நகர்ப்புற நில ஆவணங்களின் கலங்கள் கிராமப்புற நில ஆவணங்களினின்று வேறுபட்டுள்ளதால், முதலில் கிராமப்புற நில ஆவணங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப் பட்டபோது நகர நில ஆவணங்கள் எடுத்துக் கொள்ளப் படவில்லை. பின்னர் நகர நில ஆவணங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப் பட்டது. தற்பொழுது மொத்தமுள்ள **38.13** இலட்சம் நகர நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டு, ஒப்பிடல் பணியும் முழுமையாக நிறைவு பெற்றுள்ளது.

நகர நில ஆவணங்களுக்கான இணையம் சார்ந்த மென்பொருள் தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்டு, அது சென்னையிலுள்ள மாநில தரவு மையத்தில் உள்ள சேவைக் கணினியில் நிறுவப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தில் இதுவரை **6** வட்டங்களில் இணையவழி பட்டா மாறுதல் சேவை சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள **4** வட்டங்களிலும் மிக விரைவில் செயல்படுத்தப்படும். இதர நகர்ப்புற பகுதிகளான நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் இணையவழிபட்டா மாறுதல் திட்டம் **31.12.2016**–க்குள் செயல்படுத்தப்படும்.

### 6.4.4 நத்தம் நில ஆவணங்களை கணினிப்படுத்துதல்

நத்தம் நில ஆவணங்களை கணினிப்படுத்தும் பணி அனைத்து மாவட்ட நில அளவை அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. மொத்தமுள்ள **1.37** கோடி நத்தம் நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டு, ஒப்பிடல் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கணினிப்படுத்தப்பட்ட நத்தம் நில ஆவணங்கள் இணையம் சார்ந்த தமிழ்நிலம் மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு நத்தம் பட்டாக்களை இணையம் வழியே வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.4.5 புலப்படங்களைக் கணினிமயமாக்கல்.

தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்ட கொலாப்லேண்ட் மென்பொருள் மூலம் புலப்படங்களைக் கணினிப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தமுள்ள **54.31** இலட்சம் புலப்படங்களில் **39.40** இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள புலப்படங்களும் **31.12.2016**–க்குள் கணினிப்படுத்தப்படும். மேலும், இணையவழி பட்டாவுடன் கணினிப்படுத்தப்பட்ட புலப்படத்தினை இணைத்து வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 6.4.6 கிராம வரைபடங்களைக் கணினிப்படுத்துதல்


அனைத்து கிராம வரைபடங்களின் ஒளி பிம்ப நகல் எடுக்கப்பட்டு இலக்க முறையில் சேமிக்கப்பட்டுள்ளன. புவிசார்ந்த தகவல் தொடர்பு அமைப்பு முறையை வரைபடங்கள் மற்றும் கிராம வரைபடங்களில் உட்புகுத்தி கிராம வரைபடங்களைக் கணினிப்படுத்தும் பணி சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை **3,000** கிராம வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள பணி ஓராண்டு காலத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

### 6.4.7 இணையவழி பட்டா மாறுதல் திட்டம்

கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களை இணையவழியில் பராமரிப்பதற்கான மென்பொருள் தேவை குறிப்பு ஆவணம் (Software Requirement Specification Document) தயாரிக்கப்பட்டு தேசிய நில ஆவண மேம்பாட்டுத்திட்டத்தின் மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு, இத்துறை அலுவலர்களின் தொடர் கண்காணிப்பு மற்றும் கருத்துக்களின் மூலம் 'இணையம் சார்ந்த மென்பொருள்' தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களைப் பராமரிக்கும் பொருட்டு சென்னை அருகே பெருங்குடியில் உள்ள மாநில தரவு மையத்தில் சேவைக் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன.

## நில ஆவணங்களை இணையவழி தமிழ்நிலம் மென்பொருள் வழியாக வெளியிடுவதற்குத் தேவையான வழிமுறைகள்

வட்ட அலுவலகங்களால், நிலஆவணங்களை இணையவழியில் கொண்டு வரப்படுவதற்கு கீழ்காணும் வழிமுறைகள் தேவைப்படுகின்றன.



பெரம்பலூர் வட்டம் 9.11.2014 முதல் இணையவழிப் பயன்பாட்டிற்கு சோதனை அடிப்படையில் கொண்டு வரப்பட்ட பிறகு, 1.7.2015 அன்று ஸ்ரீரங்கம் வட்டத்தில் இத்திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தொடர்ச்சியாக 2015–ஆம் ஆண்டிலேயே கூடுதலாக 126 வட்டங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. தற்போது வரையில் மொத்தமுள்ள 285 வட்டங்களில் 267 வட்டங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டம் கூடிய விரைவில் இதர வட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**(அ) பொதுமக்களுக்கான பயன்கள்**

- **பொதுமக்கள் அருகாமையில் அமைந்துள்ள பொதுச்சேவை மையத்தின் மூலம் இணைய வழியில்பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.**

- **கணினி மூலம் அச்சிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக வழங்கப் படுவதுடன், மனுக்களின் மீதான பரிசீலனையும் முறைப்படி மேற்கொள்ளப்படுகிறது.**

- தமது விண்ணப்பத்தின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தையும் அதன் தற்போதைய நிலை குறித்தும் இணையம் மூலம் அறிந்து கொள்ள இயலும்.

- வட்டாட்சியர்/ துணை வட்டாட்சியரால் பட்டாவிற்கான விண்ணப்பத்தினை அங்கீகாரம்/ நிராகரிப்பு செய்யப்படும் போது விண்ணப்பதாரர்களின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அளிக்கப்படுகிறது.

- இலக்க முறையில் ஒப்பமிடப்பட்ட பட்டாவை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியம் தவிர்க்கப்படும்.

- நிலம் தொடர்புடைய சேவைகள் அனைத்தும் மின்சேவை மூலமாக உடனுக்குடன் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்படும்.

- இதுவரை (16.8.2016 வரை) 8,67,488 இணையவழி பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 6,34,675 விண்ணப்பங்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




**பொதுசேவை மையத்தில் பொதுமக்கள் பட்டா பெறுதல்**

**(ஆ) அலுவலர்களுக்கான பயன்கள்**

- பணித்தொடர் முழுமையும் கணினிப்படுத்தப் பட்டுள்ளதால், அலுவலர்களின் பணிப்பளு வெகுவாக குறைக்கப்படுவதுடன், தமது வழக்கமான பணிகளை எளிதாக மேற்கொள்ளலாம்.

- புதிய பொலிவுடன் கூடிய தொழில்நுட்பச் சூழலில் அலுவலர்கள் பணிபுரிய இயலும்.

- உயர் அலுவலர்கள் பணியின் நிலையை இணையம் வாயிலாக நெருக்கமாக கண்காணிக்க இயலும்.

- நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை அலுவலர்கள் எந்நேரத்திலும் ஆய்வு செய்து, தேவையான அறிவுரைகளை வழங்க இயலும்.

### 6.4.8 பதிவுத்துறை தரவு தளத்துடன் நிலஅளவை ஆவணங்களை ஒருங்கிணைத்தல்

- இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள கணினிமயப் படுத்தப்பட்ட நில ஆவணங்களில் உள்ள நில உரிமை குறித்த விவரங்களை, உறுதிப்படுத்திக்கொண்ட பின்னரே, நில பரிவர்த்தனைகளை பதிவுத்துறை அனுமதிக்கிறது.

- நிலப்பரிவர்த்தனையின் போது நிகழ்நிலைப் படுத்தப்பட்ட நிலஅளவை ஆவணங்களை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவுத்துறை அலுவலர்கள் பார்வையிடவும், பரிவர்த்தனையின்போது பெறப்பட்ட ஆவணங்களை சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள்

உபயோகப்படுத்திக்கொள்ளவும் தானியக்கப் பரிமாற்றம் (automatic transfer) நடைபெறுவதற்கு வழிவகை செய்யப்படவுள்ளது.

- இந்த மென்பொருள் தொகுதி, விரைவில் சோதனைக்குட்படுத்தப்பட்டு, **31.12.2016–**க்குள் அனைத்து வட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

## 6.5 தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்

'நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம்' மற்றும் 'வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் திட்டம்' ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து 'தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்' என ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது டிஜிட்டல் இந்தியா நிலஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (Digital India Land Records Modernization Programme) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு மாநில அரசு

தனது பங்களிப்பான நிதிஆதாரங்களை வழங்கி, பொதுமக்களின் சேவையை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விதமாக நில மேலாண்மையை நவீனப்படுத்துதல், நிலம் சம்பந்தப்பட்ட சொத்துகள் மீதான தாவாக்களை குறைத்தல், நில ஆவணங்களை பராமரித்தலில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், உத்தரவாதத்துடன் கூடிய உரிமை ஆவணத்தை வழங்கும் நிலையை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ், அரசினால் இத்துறையின் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

### 6.5.1 நில ஆவண மேலாண்மை மையங்கள் (LRMCs)

நில ஆவண மேலாண்மை மையங்கள்/ நவீன ஆவண காப்பறைகள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் அனைத்து வட்டங்களிலும் பொது சேவை மையங்களாகச் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்கு வருவாய்த் துறையின் மூலம் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் ஒற்றைச் சாளர முறையில் நில ஆவண மேலாண்மை மையங்கள் வாயிலாக வழங்கப்படும்.

**நில ஆவண மேலாண்மை மையங்கள் உருவாக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள விவரம்**

| வ. எண். | நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டு | ஒப்பளிப்பு செய்துள்ள மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்) | நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட வட்டங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2011–2012 | 525.00 | 21 |
| 2 | 2013–2014 | 855.00 | 57 |
| 3 | 2014–2015 | 1140.00 | 76 |
| | **மொத்தம்** | **2520.00** | **154** |

**தற்போதைய நிலை**

(1) இதுவரை பல்வேறு மாவட்டங்களில் உள்ள 65 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் நிறுவப்பட்டு செயலாக்கத்திற்கு வந்துள்ளன.

(2) அனைத்து பழைய ஆவணங்களை பாதுகாக்க தகுந்த உள்கட்டமைப்பு வசதிகள் நில ஆவண மையங்களில் ஏற்படுத்தப்படும்.

(3) அனைத்து பழைய நிலஆவணங்களையும் பொதுமக்கள் எளிதாகப் பெறும் வகையில் ஒளிபிம்ப நகல் எடுத்து அட்டவணைப்படுத்தப்பட்டு இலக்க முறையில் பாதுகாக்கப்படும்.

## 6.5.2 புதிதாக உருவாக்கப்பட்ட வட்ட மற்றும் வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கு கணினி வழங்குதல்

பொதுமக்கள் நிலஆவணங்களை எளிதாகப் பெறும் வகையில் தமிழகம் முழுவதும் வட்ட தலைமையகங்களில் வட்ட தரவு மையங்களும், வருவாய் கோட்ட தலைமையகங்களில் கோட்ட தரவு மையங்களும் ஏற்படுத்தப்பட்டு, இவற்றிற்கு கணினி உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட 65 வட்ட அலுவலகங்களில் 34 வட்ட அலுவலகங்களுக்கும், 9 வருவாய் கோட்ட அலுவலகங்களில் 8 வருவாய் கோட்ட அலுவலகங்களுக்கும் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 31 வட்ட அலுவலகங்கள் மற்றும் ஒரு வருவாய் கோட்ட அலுவலகம் ஆகியவற்றிற்கு கூடிய விரைவில் கணிப்பொறி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

## 6.5.3 தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்ட பிரிவு (NLRMP Cell)

தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் ஒரத்தநாட்டிலுள்ள நிலஅளவை பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சி பிரிவினை ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நவீன நில அளவை மற்றும் இலக்க முறை படம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி அளிக்க ஒரு பயிற்சி பிரிவு

உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக மின்னணு நிலஅளவை கருவிகள் (Electronic Total Stations) லேசர் ஜெட் அச்சுப்பொறி, நில இயல் நிலைக்கலன் (Global Positioning System), ஆட்டோ கேட் (AutoCad) மென்பொருள், அறைகலன்கள், எழுதுபொருட்கள், நூலக புத்தகங்கள், பயிற்சிக்கு தேவையான பொருட்கள் மற்றும் 10 KVA மின்ஆக்கி (Generator) ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நிலஅளவை பயிற்சி மையம் தவிர சென்னையிலும், ரூ.2.45 கோடி செலவில் நவீன வசதிகளை கொண்ட நவீன நில அளவை பயிற்சி மற்றும் படம் தயாரித்தல் தொடர்புடைய பயிற்சியினை, வழங்கும் பொருட்டு ஒரு பயிற்சி மையம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 6.6 நில அளவைத் துறையின் சாதனைகள்

### (1) குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

2013–14–ஆம் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி எண். 110–ன்கீழ் அறிவித்ததன்படி 100 குறுவட்டங்களுக்கு குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் தாங்கள் வசிக்கும்

குறுவட்டங்களிலேயே குறுவட்ட அளவர்களை எளிதாகத் தொடர்பு கொள்ள இயலும். இத்திட்டம் பொதுமக்களுக்கு மட்டுமல்லாது குறுவட்ட அளவர்கள் தங்களின் புல ஆய்வு தொடர்புடைய பணிகளை குறுவட்டத்திலேயே இருந்து மேற்கொள்ளவும் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

(2) கணினிப்படுத்தப்பட்ட புலப்படங்களை (FMB Sketch) பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாகவும், இணைய வழி (Online) நில ஆவண பராமரிப்பிற்கு உபயோகமாகும் வகையிலும், 1,140 குறுவட்ட அளவர்களுக்கு (Firka Surveyors) மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

(3) பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ள ஏதுவாக குறுவட்ட அளவர்கள் தமது கைப்பேசியில் பொருத்தி, குறிப்பிட்ட எண்களுக்கு மட்டும் பேசக்கூடிய வகையில் BSNL-CUG (Closed User Group) திட்டத்தின் கீழ் குறுவட்ட அளவர்களுக்கும் (Firka Surveyors) ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்கள் ஆகியோருக்கும் 1,600 சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

(4) இணைய வழி பட்டா மாறுதல் திட்டப்பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில் ஒரு காணொளி காட்சி அமைப்பு (Video Conferencing) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் மூலம் உதவி இயக்குநர்கள் மற்றும் மாவட்ட அளவிலான நில அளவைப் பணியாளர்களுடன் திங்களிருமுறை காணொளி காட்சி ஆய்வுக்கூட்டம் கூட்டப்பட்டு அவர்களின் தேவைகள் உடனுக்குடன் அறியப்படுவதுடன் மட்டுமல்லாமல் அவர்களின் பணியும் ஆய்வு செய்யப்படுகிறது.

(5) நில அளவைப் பதிவேடுகள் துறையில் இதுவரை 1,232 நில அளவர் மற்றும் 455 வரைவாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. தற்போது 224 நில அளவர் மற்றும் 184 வரைவாளர் பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. புதிதாக பணி நியமனம் பெற்றவர்களுக்கு புலத்திலும், கணினியிலும் பயிற்சி அளிக்கும் விதமாக ஏற்கனவே நில அளவைப் பதிவேடுகள் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 100 சார் ஆய்வாளர்களை மறு நியமனம்

செய்ய அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஓய்வுபெற்ற அலுவலர்கள் மறுநியமனம் செய்யப்பட்டு புதிய நிலஅளவர், வரைவாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

## 6.7 கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரித்தல்

**2014–15–**ஆம் நிதியாண்டில் சட்டமன்ற பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை தமிழில் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பணிகளை உரியகாலத்திற்குள் முடித்திட ஏதுவாக தேவையான இடவசதி ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளதுடன் **25** கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை அனைத்து மாவட்ட மற்றும் வட்டங்களின் வரைபடங்களும் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராமங்களின் வரைபடங்களை தமிழில் கணினிப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. முழுவீச்சில் நடைபெற்றுவரும் இப்பணி ஓராண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.



**கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்களை மத்திய நிலஅளவை அலுவலகம், கணினி வரைபட மையத்தில் தமிழ்மொழியில் தயாரித்தல்**

கணினிமயமாக்கப்பட்ட கிராம/ வட்ட/ மாவட்ட வரைபடங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்ட பின்னர் பொது மக்களுக்கு பயன்பாட்டிற்கு கிடைக்க வசதிகள் செய்யப்படும். மேலும் இந்த வரைபடங்களை இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படும். தமிழ் மொழியிலான இந்த வரைபடங்கள் கிராம மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும்.

மாவட்ட/ வட்ட/ கிராம வரைப்படங்கள் இணையதளத்தில் வெளியிடப்படுவதால் அவை பொதுமக்களுக்கு பயனுள்ளதாக அமைவதுடன் நிலஅளவை வரைபடங்களை பயன்படுத்தும் இதர அரசுத் துறைகளும் அவற்றை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்து பயனடையலாம். இது நிலஅளவைத் துறையின் சாதனைகளில் ஒன்றாக அமையும்.

## 6.8 நிலவரித்திட்டம்

தொன்று தொட்டு நிலஉடைமையாளர்களிடமிருந்து, நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குரிய பாகமாக பெறும் உரிமை இருந்து வந்துள்ளது. இதற்குரிய பரிமாற்ற பணமதிப்பை 'நிலவரி' என்றும் இதனை கணக்கிடும் முறையை 'வருவாய் நிலவரித்திட்டம்' என்றும் அழைக்கின்றோம். இரயத்துவாரி நிலவரித்திட்டத்தின்கீழ் மண்ணின் கூட்டமைப்பு, மண்ணின் பண்புகளுக்கேற்ப தரம் மற்றும் வகைகளாக பிரித்தல் மற்றும் மண்ணின் விளைவிக்கும் திறனை பாதிக்கக்கூடிய இதர காரணிகள் ஆகியவைகளின் அடிப்படையில் "நிலவரி" நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் காலத்தில், குடியானவர்களிடமிருந்து ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்கள் நிலவரியை அதிகமான அளவில் வசூலித்ததாலும் மண்ணின் விளைவிக்கும் திறன் அடிப்படையில் வரி நிர்ணயிக்கப்படாததாலும், ஜமீன் எஸ்டேட்டுகளில் இருந்த குடியானவர்கள் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தார்கள். நிலவரிச் சுமையை குறைப்பதற்காகவும், குடியானவர்களிடமிருந்து அரசே நேரடியாக வசூலிப்பதற்காகவும் அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை

சாதிப்பதற்காக, பல இடைத்தரகர் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன.

1. தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/1948)

2. தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

3. தமிழ்நாடு குத்தகை உடைமை (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)

4. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

5. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

6. தமிழ்நாடு வரியில்லா நிலங்களில் வரி விதித்தல் சட்டம் 1972 (தமிழ்நாடு சட்டம் 31/1973)

**7.** தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) இரயத்துவாரி நிலவரித்திட்ட சட்டம் **1964 (**தமிழ்நாடு சட்டம் **30/1964)**

தமிழ்நாடு சட்டம் 26/1963-இன் கீழ் வரும் 7 எஸ்டேட்கள் மற்றும் தமிழ்நாடு சட்டம் **30/1963–**இன் கீழ் வரும் **8** கிராமங்களையும் தவிர இதர அனைத்து பகுதிகளிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன**.** மேலும் தமிழ்நாடு சட்டம் **24**/1969**–**இன் கீழ் நீலகிரி மாவட்டம் ஜென்மம் நிலங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது**.**

**<u>நிலவரித்திட்ட சட்டங்களின் கீழ் பணிகள் நிலுவையிலுள்ள விவரங்கள் பின்வருமாறு:</u>**

**I. தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)**

தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது**.**

அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த எஸ்டேட்டுகளில் பின்வரும் **10** எஸ்டேட்டுகளைத் தவிர, இதர அனைத்து எஸ்டேட்டுகளிலும் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டுவிட்டன**.** பல்வேறு நீதிமன்ற வழக்குகளினால் நிலவரித்திட்டப் பணிகள்

குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படவில்லை. தற்போது நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வந்த இனங்களில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஒவ்வொரு எஸ்டேட்/ கிராமங்களில் பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு**

| வ. எண். | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | அரையபுரம்<br>தட்டிமால் படுகை | பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் | நிலவரித்திட்டப் பணி நடைபெற்று வருகிறது. |
| 2 | சூரிய நாராயணபுரம் | பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் | நிலவரித்திட்டப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். |
| 3 | இராமச்சந்திரன் கோயில்பத்து | தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் | நீதிமன்ற வழக்கின் முடிவினை எதிர்நோக்கி நிலவரித்திட்டப் பணி நிலுவையில் உள்ளது. |
| 4 | கழனிவாய்ப்பட்டி | திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் | நிலவரித்திட்டப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். |
| 5 | சென்னசந்திரம் | ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | நிலஅளவை ஆவணங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 6 | திம்மசந்திரம் | | |
| 7 | உளியாளம் | | |
| 8 | பைரசந்திரம் | ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | தமிழ்நாடு சட்டம் 26/1963–ஐ வரைவு அறிவிக்கையிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கையில் உள்ளது. |
| 9 | இளையசந்திரம் | | |
| 10 | மாரசந்திரம் | | |

## II. தமிழ் நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றி அவற்றில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில் பின் வரும் 5 கிராமங்களில் மட்டும் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையில் உள்ளன. பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்குப் பின் தற்போது நிலவரித்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண் | கிராமத்தின் பெயர் | வட்டம் மற்றும் மாவட்டம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | காரணப்பட்டி | இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் | நிலவரித்திட்டப் பணி நடவடிக்கையில் உள்ளது. |
| 2 | கோதண்டராமபுரம் | இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் | |
| 3 | நிலையப்பட்டி | இலுப்பூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் | நிலஅளவைப் பணி நடவடிக்கையில் உள்ளது. |
| 4 | அகஸ்தியம்பள்ளி | வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் | |
| 5 | தாரிக்கொம்பன் | இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் | மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. |

## III தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்டுகளில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை கைப்பற்றி அவ்வுடமைகளில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது.

இச்சட்டத்தை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9-வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து, சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகள் புதுதில்லி உச்சநீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு வழக்குகள் மற்றும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தனர். இறுதியாக உச்சநீதிமன்ற மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, இந்திய அரசியலமைப்பு சட்டம் 9வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை உறுதி செய்து வழக்கு முடிக்கப்பட்டது. இதுவரை நிலவரித்திட்டப்பணி முடிக்கப்பட்ட பரப்பளவு விவரம்.

| வ. எண் | விவரங்கள் | விஸ்தீரணம் (ஏக்கரில் ) |
|---|---|---|
| 1 | மொத்த ஜென்மம் நிலங்கள் | 80,087.74 |
| 2 | ஆரம்ப கட்டத்தில் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டது | 28,087.03 |
| 3 | பிரிவு 53ன் கீழ் வனமாக அறிவிக்கப்பட்டது | 17,014.43 |
| 4 | வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டது | 11,204.47 |
| 5 | வனநிலமாக அறிவிக்கப்பட்ட நிலங்களில் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட பகுதி | 5,809.96 |
| 6 | நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு | 34,986.28 |

இச்சட்டத்தின் கீழ் வனமாக அறிவிக்கப்பட்ட 17,014.43 ஏக்கர் நிலங்களில் 5,809.96 ஏக்கர் பரப்பு நீதிமன்ற வழக்குகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதை தவிர்த்து அரசாணை (நிலை) எண். 363, வருவாய் [நிஅ.(1)] துறை, நாள் 28.11.2011–இன்படி 11,204.47 ஏக்கர் பரப்பு வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிலவரித்திட்டம் அமல்படுத்தப்படவேண்டிய மீதமுள்ள 34,986.28 ஏக்கர் நிலம் தொடர்பாக, உயர்நீதிமன்றம்

மனுதாரர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பிரிவு **8 (அ) 9–**இன் கீழ் பரிசீலிக்க நிலவரித்திட்ட அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலருக்கு உத்தரவிட்டது**.** அதன்படி நிலவரித்திட்ட அலுவலருக்கு (கூடலூர் ஜென்மம் நிலங்கள்) **566** மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன**.** அதன் தற்போதைய நிலை பின்வருமாறு**.**

| | |
|---|---|
| பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | **566** |
| முடிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை<br>(a) ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுக்கள் **–– 0**<br>(b) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் **–– 420** | **420** |
| நிலவரித்திட்ட அலுவலரிடம் நிலுவையிலுள்ள மனுக்கள் | **146** |
| நிலவரித்திட்ட அலுவலரின் உத்தரவினை எதிர்த்து ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் (JAT) மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்கள் | **317** |
| ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்கள் | **08** |
| ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் நிலுவையிலுள்ள மனுக்கள் | **309** |
| ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயத்தின் உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்கள் | **06** |

### 6.8.1 திட்டங்கள்

### 6.8.1.1 நத்தம் நிலவரித்திட்டம்

அரசாணை (நிலை) எண்.1971, வருவாய்த்துறை, நாள் 14.10.1988–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில், மாநிலம் முழுவதும் (பழைய சென்னை நீங்கலாக) நத்தம் வீட்டு மனைப் பகுதிகளிலும் வேளாண்மைக்கு அல்லாத பிற காரணங்களுக்கு பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களிலும் நிலவரித்திட்டப் பணிகளை செயல்படுத்த அரசு, ஆணை பிறப்பித்தது. அதன்படி, 1999 ஆம் ஆண்டு வரையில், 12 வட்டங்களான கன்னியாகுமரி மாவட்டம் (4 வட்டங்கள்), நீலகிரி மாவட்டம் (6 வட்டங்கள்), காஞ்சிபுரம் மாவட்டம் (1 வட்டம்) திருவள்ளூர் மாவட்டம் (1 வட்டம்) மற்றும் சென்னை மாவட்டங்களில் சேர்க்கப்பட்ட 31 கிராமங்களைத் தவிர, இதர அனைத்து மாவட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் 2007–இல் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி, கன்னியாகுமரி மாவட்டம் (4 வட்டம்), காஞ்சிபுரம் மாவட்டம் (1 வட்டம்) மற்றும் சென்னை மாவட்டத்தில் சேர்க்கப்பட்ட 31 கிராமங்களில் முடிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 6.8.1.2 மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி

அரசாணை (நிலை) எண்.113, வருவாய்த் துறை, நாள் 2.2.1995–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் 67 மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர் பணி தொடர அரசு ஆணை பிறப்பித்தது. இதில், 60 கிராமங்களில் இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி வட்டம் பச்சமலை கிராமத்தில் விவசாய நிலங்களுக்கு பட்டா வழங்கும் பணி முடிவுற்று மனைப் பகுதிகளில் பட்டா வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை வட்டம் ஆனைமலைக்குன்றுகள் கிராமம், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை வட்டத்திலுள்ள 4 மலைக்கிராமங்கள், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஏலகிரி மலை கிராமம் ஆகியவைகளில் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 6.8.1.3 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின் தொடர் பணி

அரசாணை (1டி) எண்.103, வருவாய் [நி.அ.2(1)] துறை, நாள்1.3.2007–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் (சென்னை பழைய நகரம் தவிர) வருவாய் ஆவணங்களின் பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும் நிலஉடமைதாரர்களுக்கு

பட்டா வழங்கவும் ஆவணங்கள் தயார் செய்து மாவட்ட வருவாய் நிருவாகத்தின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவும் வருவாய் பின் தொடர்பணி தொடங்க அரசால் உத்தரவிடப்பட்டது.

மொத்தமுள்ள 123 நகராட்சிகளில் 65 நகராட்சிகளில் இப்பணி நடைபெற்று வருகிறது மற்றும் 7 நகராட்சிகளில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 12 மாநகராட்சிகளில், 5 மாநகராட்சிகளில் 9 அலகுகளிலும் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி 74 நிலவரித்திட்ட வட்டாட்சியர் அலகுகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. தற்போதுள்ள அலகுகளில் பணி முடிந்தபின் மீதமுள்ள பகுதிகளில் பணி துவங்கப்படும்.

## 6.9 வக்ஃப் கணக்கெடுப்பு பணி

பொதுவாக வக்ஃப் என்பது இஸ்லாம் மதத்தைச் சார்ந்த வழிபடும் தலம், மதம் மற்றும் தொண்டு நிறுவனங்களை குறிப்பிடுவதாகும். ஒவ்வொரு வக்ஃப் நிறுவனத்திற்கும் உரிய அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அந்தந்த வக்ஃபின் சொத்துக்கள் என கருதப்படுகிறது.

வக்ஃப் சட்டம் 1995 (மத்திய சட்டம் 43/95), மத்திய அரசால் இந்தியாவிலுள்ள வக்ஃப் மற்றும் அதன் தொடர்பான விஷயங்களை சிறந்த முறையில் நிர்வகிப்பது தொடர்பாக இயற்றப்பட்ட சட்டமாகும்.

இச்சட்டப் பிரிவு 4-இன்படி மாநில அரசு, அந்த மாநிலத்திற்கு ஒரு வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையாளரையும் தேவையான கூடுதல் மற்றும் உதவி வக்ஃப் ஆணையாளர்களையும் நியமித்து மாநிலத்தில் இச்சட்டம் தொடங்கும் நாளன்று மாநிலத்தில் உள்ள வக்ஃப், அதன் ஷியா மற்றும் சன்னி பிரிவு, அந்த வக்ஃபின் நோக்கம், அதன் மொத்த வருமானம், அரசுக்கு செலுத்தும் நிலவரி மற்றும் இதர வரிகள், அதன் செலவுகள் ஆகிய விவரங்களை சேகரிக்க வேண்டும்.

இதன்படி நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரை வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையராகவும், அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களை கூடுதல் வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையாளர்களாகவும், அனைத்து வருவாய் வட்டாட்சியர்களை உதவி வக்ஃப் கணக்கெடுப்பு ஆணையர்களாகவும் நியமிக்கப்பட்டு இக்கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

இப்பணி இதுவரை 10 மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு படிவ விவரம்

| மொத்த மாவட்டங்கள் | வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்கள் | தற்போது முழுமையாக அறிக்கை பெறப்பட்ட மாவட்டங்கள் | பணி நடைபெற்று கொண்டிருக்கும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| **32** | **10** | **18** | **4** |
| மாவட்டங்கள் | 1. விழுப்புரம்<br>2. திருச்சிராப்பள்ளி<br>3. சிவகங்கை<br>4. நாமக்கல்<br>5. கரூர்<br>6. தேனி<br>7. சேலம்<br>8. புதுக்கோட்டை<br>9. திருவண்ணாமலை<br>10. அரியலூர் | 1. விருதுநகர்<br>2. தஞ்சாவூர்<br>3. நீலகிரி<br>4. நாகப்பட்டினம்<br>5. ஈரோடு<br>6. திருநெல்வேலி<br>7. கன்னியாகுமரி<br>8. இராமநாதபுரம்<br>9. கிருஷ்ணகிரி<br>10. தர்மபுரி<br>11. மதுரை<br>12. கோயம்புத்தூர்<br>13. திருப்பூர்<br>14. திண்டுக்கல்<br>15. தூத்துக்குடி<br>16. காஞ்சிபுரம்<br>17. பெரம்பலூர்<br>18. கடலூர் | 1. வேலூர்<br>2. திருவாரூர்<br>3. திருவள்ளூர்<br>4. சென்னை |

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்